உ

T. 16529

சிவமயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

துரோபதை குறம்.

இவை

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேக விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1891

T016529
Sarasvati Mahal Library. Thanjavur

திரோபதை யம்மாள்.



உ

கடவுள்துணை.

துரோபதை-குறம்.

விருத்தம்.

திருந்தியகுழல்பாஞ்சாலி செல்வத்துரோபதையாமங்கை
பெருந்திருவாள்தன்பக்கல் பேசியகுறத்தைப்பாட
பொருந்தியதெய்வச்செம்பொற் பொன்மலைவாழுங்கங்கை
தருந்திவ்யமுகமனைத்துந் தருவதுதுதிசெய்வீரோ.

ஆதியேயரியேபோற்றி யச்சுதாபோற்றிபோற்றி
சோதியேசுடரேபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
நாதனேவள்ளிபங்கா நாரணன்மருகாபோற்றி
காதலாய்க்குறத்தைப்பாடக் கந்தனேயருள்செய்வாயே.

பஞ்சபாண்டவர்கள்தேவி பாஞ்சாலிபாவைதானும்
வஞ்சகன்துரியனாலே வனவாசம்பன்னிரண்டும்
தஞ்சமாய்க்கழிந்தபின்பு தானுமேவிராடதேசம்
வஞ்சியும்மன்னர்கூட வந்துமேதோன்றினாரே.

கலிவிருத்தம்.

பரமசிவம்.

மஞ்சுலாவுபாஞ் சாலநன்மாநகர்
விஞ்சுதுரோபதை மேற்சிறுநற்குற
வஞ்சிமாலைவழுத்த வேதிங்களார்
செஞ்சடிலன் றிருவடிவாழ்த்துவாம்.

விநாயகர்.

பொன்னுமாமணிப் பூங்கழற்பொற்பினு
டன்னுபாஞ்சாலி வஞ்சிக்குறஞ்சொலப்
பன்னுதும்பையுங் கொன்றைப்பணிமதி
மின்னுவேழமுகவனை வேண்டுவோம்.

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

திங்கள்றுகாவணியுஞ் சடையிலங்குபொன்முடியுஞ்
செயிர்தீர்நன்மா
தங்கவதனந்தயங்க நான்மறையுஞ்சயசயவென்
றேத்திப்போற்றப்
பொங்கமுடனின்றநல்லோய் தமியனுக்கின்றாற்குமனம்
புளகம்பூப்பப்
பங்கமறவென்னாவி லிருந்துபொருண்மறுதுமருள்
பாலிப்பாயே.

வேறு.

திருந்தியபொழில்பாஞ்சாலி சீர்கதைதமிழாற்பாடப்
பெருந்திருவாணைபாதம் பெட்புடன்வணங்கியேத்தி
பொருந்தியநூறுவண்ணம் புகல்குறவஞ்சியாக
வருந்தியேயிந்தக்காதை வளம்பெறப்பாடுவோமால்.

காப்பு.

விநாயகர்- துதி.

வெண் செந்துறை.

விக்கினவிநாயகரோ வேலவரோமுன்னடவும்
சந்திவிநாயகரோ சரிந்தவயிற்றோனே
அந்திபகலுமுமை யன்பாகயான்மறவேன்
முந்திமுந்திஎந்தனுக்கு முன்னடக்கவேண்டுமையா
ஒருகையில்மோதகமும் ஒருகையில்செங்கரும்பும்
ஒருகையில்தேங்காயும் ஒருகையில்நற்கரும்பும்
இத்தனையும்பெற்றுமல்லோ இருந்தீர்மரத்தடியில்
உம்மை-கண்டுபரமசிவன் கருத்தில்நினைவாகி
விக்கினரும்வேலவரும் இருவரும்வாருமென்றார்
அந்தவுரைகேட்டு அடிதொழுதீரிருவர்களும்
பரமசிவன்பார்த்துப் பார்வதியைக்கண்காட்டி

பிள்ளைகளைத்தான்பார்த்துப் பூரிப்பாயேதுசொல்வார்
ஈரேழுலகமெல்லோ மிருவருஞ்சுற்றிவந்தால்
முந்திவந்துநின்றவர்க்கு இந்தக்கனிதருவேன்
என்றவுரைகேட்டு எழுந்தாரேவேலவரும்
பச்சைமயிலேறிப் பாரெல்லாஞ்சுற்றப்போனார்
அப்போதுநீரெழுந்து அரனாரைச்சுற்றிவந்தீர்
ஈரேழுலகமெல்லா மிவர்தானேதெய்வமென்று
சுற்றிவந்தபாவனையை மெத்தெனவேதானறிந்து
சந்தோஷப்பட்டுமெல்லோ கொடுத்தார்கனியுமக்கு
கானமயிலேறிக் கடலேழுலகமெல்லாம்
எல்லையெல்லாஞ்சுற்றிவந்து ஏமாந்தார்வேலவரும்
கர்த்தரிடகைதனிலே கனிபெற்றுவந்தவரோ
கனிபெற்றுவந்தவரோ காருமையாவிக்கினரோ
துரோபதையாள்தன்குறத்தைத் தொல்லுலகில்யான்பாட
பாஞ்சாலிதன்குறத்தைப் பார்தனிலேயான்பாட
பாடவருள்புரியும் பார்வதியாள்புத்திரரே
சொல்லவருள்புரியும் சிவசங்கரனார்புத்திரரே
அருள்புரியவேண்டுமையா ஆண்டவரேயென்தனுக்கு

முருகர்-துதி.

ஆறுமுகம்படைத்த அரனார்திருமகனே
சரவணப்பொய்கைதனில் வந்துதித்தசண்முகனே
அசுரருடல்பிளக்க அவதாரமானவரே
கானமயிலேறுங் கர்த்தரிடபுத்திரரே
பச்சைமயிலேறும் பார்வதியாள்புத்திரரே
புள்ளிமயிலேறும் வள்ளிமணவாளா
வள்ளிமணவாளா வேலவரேமுன்னடவும்
அக்கினியில்வந்துதித்த ஆரணங்குதுரோபதையாள்
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அபிஷேகபத்தினியாள்
பத்தினியாள்தன்குறத்தைப் பாருலகில்பாடுதற்கு
கர்த்தரிடபுத்திரரே கடுகவந்துகாருமையா
கதைகளதுதப்பாமல் காருமையாவேல்முருகா
பாட்டுதவறாமல் பட்சமுடன்வந்தருளும்
வாக்குத்தவறாமல் வர்ணமுகம்பாரும்

சரஸ்வதியம்மன்-ஸ்துதி.

வராகாவதாரங்கொண்ட மகாவிஷ்ணுதன்னுடைய
நாபிக்கமலந்தனில் வந்துதித்தநான்முகனார்

நான்முகனார்தன்னுடைய நாவிலிருப்பவளே
நாவிலிருப்பவளே நற்கருத்தையும்பெண்ணும்
மாயன்மருமகளே வந்தெனக்குமுன்னடவாய்
தாயேசரஸ்வதியே சுந்தரியேமுன்னடவும்
பஞ்சவர்கள்பத்தினியாள் பாவைக்குறமுரைக்க
வஞ்சனைகளில்லாமல் வந்தெனக்குமுன்னடவும்
சொல்லுதவறாமல் சொல்வார்த்தைகுன்றாமல்
ஏடுதவறாம லெழுத்தாணிசாயாமல்
நாவுதவறாமல் நடத்துமம்மாவிக்கதையை
தப்பிதங்கள்வாராமல் சங்கரியேகாருமம்மா
குற்றங்கள்வாராமல் கொம்பனையேகாருமம்மா
காக்கக்கடனுனக்குக் கர்த்தரிடதேவியரே
பாடவெனக்கருளும் பாரளந்தான்மருமகளே
சொல்லவருள்புரியும் சுந்தரியேயெந்தனுக்கு
கடல்வண்ணன்மருமகளே கைதொழுதுபாடுகிறேன்.

கதையின்வரலாறு.

பட்டணமாம்பட்டணமா மிந்திரபுரிபட்டணமாம்
இந்திரபுரிபட்டணத்தை யிருந்தரசையாளுகையில்
பட்டணத்தையாளுகிற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்க ளரசாளுநாளையிலே
கோணாதமாதவத்தாக் குந்தியம்மாள்தாயாரும்
தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அருச்சுனனார்தேவியாக ளனைவருமொன்றாக
எல்லோருமொன்றாக விருந்தரசையாளுகையில்
அத்திப்புரமாளும் அரவக்கொடியோனும்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்தம்பிகளும்
கருணன்சகுனியுங்காங்கேயருள்ளோரும்
சிற்றப்பன்விதுரனும் சீருள்ளமற்றோரும்
பாட்டனார்பீஷ்மரும் பரியதுரோணருமாய்
எல்லோருமாக எல்லையுலகாளுகையில்
அத்திப்புரமாளு மரவக்கொடியோனும்
அம்பலத்துவாசலிலே யனைவருக்குமேதுசொல்வான்
என்-பங்காளிபஞ்சவர்கள் பாருலகமாளுகிறார்
இவரையும்நான்துரத்தி ஆளவேண்டும்சீமையெல்லா
மிப்படிக்குச்சொல்லியல்லோ எழுதினானோலையொன்று
விதுரனைப்போகவிட்டு ஐவரையுந்தானழைத்து
மாயத்தால்சூதாடி மண்ணுருகமண்பறித்து
மன்னர்சபைநடுவே மானைத்துகிலுரிந்து

கொற்றவர்கள்தன்சபையில் கோதையைத்துகிலுரிந்து
பண்ணாதகோலமெல்லாம் பண்ணியந்தப்பஞ்சவரை
காட்டாதகோலமெல்லாங் காட்டியந்தப்பஞ்சவரை
பனிரண்டுதன்வருஷம் பாரவனவாசஞ்செய்து
பதின்மூன்றும்வருஷம் அக்கியாதவாசம்பண்ணி
உருவந்தெரியாமல் ஒளித்துமிகத்தானிருந்து
பதினாலாந்தன்வருஷம் பிறந்தபிறகாக
பதினெட்டாம்நாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே
ஆடிப்பறக்கும் அமிர்தசமர்க்களத்தில்
எங்கள்முடிகளெல்லாம் இறக்கும்படியடித்து
வண்ணமுடிசிந்திராங்கள் மாண்டபிறகாக
வந்தமேனிகளெல்லாம் வாழும் அரசாண்டு
என்றுமவனுரைத்தா னெரிநாகங்கொண்டவனும்
அந்தவுரைகேட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரு மாரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும் மயிலனையாள்துரோபதையும்
அப்படியேசல்லதென்று ஆரணியம்போய்நடந்தார்
வனமாய்வனந்தாண்டி வந்தாரிருண்டவனம்
அந்தவனந்தனிலே பாணழகர்பஞ்சவர்கள்
பர்ணசாலையுண்டுபண்ணிப் பஞ்சவர்கள்தானிருந்தார்
பன்னையதுகலவைப் பாட்டைப்புளிகருணை
அம்பைபுளிகருணை நாநாவளைமுங்கினை
கிள்ளிச்சமைத்தவர் காலங்கழித்தார்கள்
இப்படியாயங்கே யிருந்தார்சிலகாலம்
மற்றுஞ்சிலகாலஞ் சென்றபிறகாக
தருமரிஷிவாயாலே நால்வருந்தான்மாண்டார்
தருமாவர்பார்த்துத் தாய்புலப்பும்வேளையிலே
நாராயணர்வந்து எழுப்பினார்நால்வரையும்
ஆபரிடபுண்ணியத்தால் அங்கேபிழைத்தார்கள்
மற்றுமொருவனத்தில் வந்தவர்வாசம்பண்ணார்
அங்கேயும்பட்ட அவதிகள்மெத்தவுண்டு
பத்துவருஷமுமே பட்டார்வெகுபாடு
பத்தாம்வருஷத்திலே பாஞ்சாலியேதுசொல்வாள்
ஐவரையுந்தெண்டனிட்டு ஆணைக்குகேட்கலுற்றாள்
ஐவர்களுங்கேளுங்க ளடியேனொருவார்த்தை
அக்கிப்புராமுமல்லோ அரவக்கொடியோனும்

சீமையும்பூமியும் தேசத்தில்நெல்விளையும்
அரவக்கொடியோனு மவனுடையசேனைகளும்
எப்படிக்கிருக்குதென்று நான்பார்த்துவாரேனையா
போகவிடைதாருமென்று பொற்கொடியுந்தெண்டனிட்டாள்
உத்தரவுதாருமென்று வுத்தமியாள்கேட்கலுமே
தக்கபுகழுடைய தருமராவேதுசொல்வார்
அனலில்பிறந்தவளே அபிஷேகபத்தினியே
இவருக்குந்தேவியரோ ஆரணங்கேநீர்கேளும்
பங்காளிவாசலுக்கு நீபோகநீதியுண்டோ
தாயாதிவாசலுக்குத் தனியாகப்போகலாமோ
போனவிடந்தனிலே பொல்லாங்குதானடந்தால்
வந்துனமக்குரைப்பா ரார்காணுமங்கையரே.
சொல்லுந்துரோபதையே யென்றுமவருரைக்க
அப்போதுதுரோபதையா ளாரணங்கேதுசொல்வாள்
இவ்வேஷமாகவேநான் போவேனோமன்னர்களே
கொச்சைக்குறத்தியைப்போல் போய்வாரேன்மன்னர்களே
மலைக்குறத்திபோலநான் வடிவெடுத்துப்போனாலே
அத்திப்புரந்தனி லெனக்கவகேடுவந்தாலே
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆயர்துணையாவார்
மச்சாவதாரங்கொண்ட யாயர்துணையாவார்
கூர்மாவதாரங்கொண்ட கோபாலர்காத்திடுவார்
வராகவதாரங்கொண்ட வைகுந்தர்காத்திடுவார்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டாள்
ஆளுலகுமன்ன னைவர்களுந்தான்பார்த்து
ஆரணங்குதுரோபதைக் கைவருந்தாமுரைப்பார்
அனலிற்பிறந்தவளே யபிஷேகபத்தினியே
பாஞ்சாலனெக்கியத்தில் வந்துதித்தபைங்கிளியே
உந்தன்மனதுபடி யுத்தமியேசெய்யுமென்றார்
உன்சித்தத்துக்கேற்றபடி செய்யுமென்றார்பஞ்சவர்கள்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையாள்
அருச்சுனராசாவை யாரணங்குதானழைத்து
இருவருமாகவல்லோ இலந்தைத்தோப்பில்வந்தார்கள்
உருத்திராட்சமரத்தடியி லுட்கார்ந்திருவருமாய்
தேராவடிவழகி துரோபதையாள்கூந்தலதை
அருச்சுனராசாவர் அவர்கையால்தான்கோதி
சீவிச்சிணுக்கறுத்துச் சிமிழ்போலக்கொண்டையிட்டு
வாரியகூந்தலதை வண்ணமுடிகொண்டையிட்டு

கொண்டைக்கழகாகக் குச்சுமிகச்சொருகி
வகையாயிரம்பெற்றதொருவான்சவுரியுட்சொருகி
ஆயிரம்பொன்பெற்ற அணிசவுரியுட்சொருகி
கொண்டையின்மேல்தாழம்பூவும் குடமல்லி,தான்முடித்து
மல்லிகையுமுல்லையும் மருக்கொழுந்துந்தான்முடித்து
ஆணழகிகண்களுக்கு அஞ்சனமையெழுதி
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
சீரானநெற்றியிலே திலதமிகவணிந்து
காதுக்கழகாகக் கம்மலதுசோடித்து
தந்தத்தால்கம்மலது தையலர்க்குக்காதிலிட்டார்
பக்கத்திலொன்னப்பூவும் பச்சைக்கல்நல்முருகும்
கொப்புமயிர்மாட்டிக் கோதையர்க்குத்தானணிந்தார்
ஒண்டிப்பச்சைத்தொங்கலிட்டு வொருகல்புதைத்திருக்க
முகத்துக்கழகாக மூக்குத்திதானணிந்தாள்
மாருக்கழகாக மார்பதக்கந்தாவடங்கள்
பலகறைகோத்ததொரு பருத்தநல்லதாவடங்கள்
அடுக்குப்பலகறை அழகானதாவடமாம்
கொத்துப்பலகறை கோர்வைமணித்தாவடமாம்
அக்குமணிகொக்குமணி யழகானபாலமணி
பச்சைமணிபாலமணி பலவகையானமணி
உடல்கழுத்தில்கொஞ்சுமணி தரித்தாளேயுத்தமியாள்
கைகட்டுஞ்சரிவளையல் கைநிறைந்தகுறவளையல்
முன்கைமுழங்கை நிறைந்தகுறவளையல்
அஞ்சுவிரலுக்கு மழகானமோதிரங்கள்
குறவரிடமோதிரங்கள் தரித்தாளேகொம்பனையாள்
கருப்புநல்லதட்டிசேலை கட்டினாள்துரோபதையும்
குறத்திவடிவானாள் கொம்பனையாளப்போது
ஆணலழகுமன்னர் அருச்சுனரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
கொம்பனையேயுந்தனுக்குக் குறக்கூடைவேண்டுமல்லோ
கோபாலனைநினைந்தால் வருமென்றார்கூடையது
அப்போதுதுரோபதையு மாயனைக்கைதொழுவாள்

குறம்.

துரோபதைமாயவனைக்கூடைகேட்பது.

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதி நாதினனா தினதெந்தினா தினனா.

மகதேவர்க்குமச்சினரேமாயவரேசுவாமி-ஐயா
வைகுந்தவாசவரேவந்தெனக்குஅருளும்
அண்டமளந்தவரேயானந்தரூபா-சுவாமி

ஆதிநாராயணரேவாந்தருகவேண்டும்
நரசிம்மவாதாரங்கொண்டாரமபத்திர்சுவாமி
லட்சுமிக்குமணவாளாஎனக்குவந்தருளும்
இரணியனைமார்பிளந்துவகுந்துதிரங்குடித்திர்
ஈரேழுலகமெல்லாம்நிறைந்தவரேவாரும்
இராவணனையுடல்பிளந்துசீதைசிறைமீட்டீர்-சுவாமி
நலமானவிபீஷணர்க்குப்பட்டமதுதந்தீர்
அன்றொருநாள்துரியோதனன்சபைதனிலேநானும்-அந்த
அலறும்போதெந்தனுக்குத்துகிலாடைதந்தீர்
இன்றொருநாளெந்தனுக்குவந்துமிகவருளி
இசைவானகுறக்கூடையெனக்குத்தரவேண்டும்
நினைத்தகுறிநானுரைக்கநல்லசெம்பொன்கூடை-நல்க
நீலவர்னமாயவரேயெனக்குத்தரவேண்டும்
அவரவர்கணினைத்தகுறிநானறிந்துசொல்ல
அழகானகுறக்கூடையெனக்குத்தரவேண்டும்
ஆறுமுகம்படைத்ததோர்வேலவரேமுருகா-சுவாமி
அம்மைவள்ளிகுறக்கூடையெனக்குத்தரவேண்டும்
தேவேந்திரனார்மகளைமணம்புரிந்தவடிவேலா-மண
தெய்வயானைகுறக்கூடையெனக்குத்தரவேண்டும்
குறவரிடபெண்கொண்டகுமரேசாமுருகா
கொம்பனையாள்கூடையதுஎனக்குத்தரவேண்டும் சுவாமி
மறவரிடபெண்கொண்டமாயவனார்மருகா-ஐயா
மாதுவள்ளிகுறக்கூடையெனக்குத்தரவேண்டும்
அக்கினியில்வந்துதித்தஐவருக்குந்தேவி-யவ
ளாயனையும்வேலனையுங்கைதொழுதுநின்றாள்
ஏழுலகமளந்தவருமீஸ்வரனார்மகனும்-அங்கே
இருவர்களுமனமிரங்கிகூடைதனையனுப்ப
வச்சிரத்தால்மாணிக்கத்தால்வாருங்கட்டுக்கூடை-அது
வைடூரியமாகதத்தால்வாம்புகட்டுங்கூடை
முத்துரத்தினப்பச்சைகளால்முழுதுங்கட்டுங்கூடை-அது
முழுநீலமாணிமுத்தால்அடிகள்கட்டுங்கூடை
கனத்தநல்லகுறிகள்சொல்லுங்காட்சிதருங்கூடை-அது
கைலாசஈஸ்வரனார்கடாக்ஷம்பெருங்கூடை
இத்தனைக்குநலமானகூடைதனையெடுத்து-அவர்
எகில்விட்டார்பாஞ்சாலிகையில்விழவென்று
அந்தநல்லகூடையது ஆகாயஞ்சுற்றி-அது
ஆரணழகிகைதனிலேவந்துவிழுந்ததுவே.

வே று.

அப்போதுதுரோபதையா ளாரணங்குதான்பார்த்து
ஆதிநாராயணனை யடிவணங்கித்தெண்டனிட்டு
திருத்தணிகைவேலவனைத் தீர்க்கநமஸ்கரித்து
கூடையதுவாங்கி கொம்பனையாளப்போது

வச்ரமணிக்கூடைக்குள்ளே வைத்தாள்பலவகைகள்
மருந்துவகைகளிலே மலைவேப்பங்கொட்டைவைத்தாள்
புலியினதுநகமும் புகழானவேர்வகையும்
நரிப்பல்நரிமுகமும் நலலமருந்துகளும்
ஆண்வசியம்பெண்வசியம் ஆனமருந்துகளும்
முதுமையுள ஆண்பெண்ணுக்கு இளமைமருந்துகளும்
முரண்கொண்டசன்னிதீர முழுகமலைவேப்பம்வேர்
பல்நோவுந்தந்தவாய்வும் தீரமருந்துவகை
மார்நோவும்பித்தவாய்வும் மாளநல்லவேர்வகைகள்
வயிற்றுவலிதனக்கு ஏற்றமருந்துவைத்தாள்
கால்வலிகைவலிக்குக் கனத்தமருந்துவைத்தாள்
பட்டோலைதன்னாலேமுடைந்தகிலுகிலுப்பை
ஈச்சங்குருத்தாலே யிசைசந்தகிலுகிலுப்பை
தாழங்குருத்தாலே தகுந்தகிலுகிலுப்பை
கொடிக்கயிர்தாம்புக்கயிர்குழந்தைகட்சேணைக்கயிர்
அடுக்குநிலவுரிகள் அழகானசிற்றுரிகள்
பிரயணைகள்சும்மாடு பிரப்பங்கோல்தானமைத்தாள்
எண்ணெய்க்குடுக்கைகளு மீச்சங்கோல்தாழகாரும்
பார்த்துக்குறியுரைக்கப்பலகரைத்தட்டுகளும்
கண்டுகுறியுரைக்கக்கனத்தவேர்மூலிகையும்
இத்தனையுங்கொண்டுமல்லோ எடுத்தமைத்தாள்கூடையிலே
கட்டுவச்சிபோலாகக் பக்கத்தில்கூடைவைத்தாள்
இடைப்பக்கங்கூடைவைத்து வலக்கையில்கோல்பிடித்து
மலைக்குறத்தியைப்போல மாதுமிகவெழுந்தாள்
அன்னநடைதுரோபதையும் அசைந்துநடக்கையிலே
காண்டாவனமெரித்த காளையவர்பார்த்து
குறத்தியருகில்வந்து கோபாலர்மச்சினரும்
குஞ்சிரிப்புக்கொண்டுமவர் குலுங்கநகைநகைத்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
சேர்த்துமவரணைத்துச் செங்கனிவாய்முத்தமிட்டு
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
தருமரும்வீமருமே தம்பிமாரிருவர்களும்
காணவேவேண்டுமென்று கட்டழகிவாருமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையும்
அப்படிக்கேநல்லதென்று ஐவர்க்குமுன்னேவந்தாள்
ஐவர்பஞ்சபாண்டவர்க ளருங்கிளியைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டுமல்லோ சரீரங்கள்பூரித்து
நீலக்குழலாட்கு நிலங்கிள்ளிக்காப்புமிட்டு
ஐவருங்கூடியல்லோ ஆரணங்குக்கேதுசொல்வார்
அனலிற்பிறந்தவளே யபிஷேகபத்தினியே
மலைக்குறத்திபோலே வடிவெடுத்துநீபோறாய்

போறவிடந்தனிலே பொல்லாங்குநேர்ந்தாலே
செல்லுமிடந்தனிலே தீவினைகள்வந்தாலே
ஆரைநினைந்திடுவாய் ஆரணங்கேசொல்லுமென்றார்
எவரைநினைந்திடுவா யெந்தனுக்குச்சொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
பங்காளிசீமையிலே பங்கம்வந்துநேர்ந்தாலே
எதிராளிசீமையிலே யிழிவுவந்துநேர்ந்தாலே
மன்னர்சபைநடுவே மாளாத்துகிலளித்த
மாளாத்துகிலளித்த மாயர்வந்துகாத்திடுவார்
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆயர்வந்துகாத்திடுவார்
என்றுமவளுரைத்து எந்திழையாளேதுசெய்தாள்
சகாதேவராசாவைச் சடுதியிலேதானழைத்து
அருகில்நிறுத்தியல்லோ ஆண்டவனைக்கைதொழுதாள்
மாபெலிக்குமண்ணளந்த மாயவரோநான்சரணம்
ஆனைமுறையிடவே யன்றுவந்துகாத்தவரோ
காளிங்கனல்மடுவில் காளையந்தசர்ப்பத்தில்
கூத்தாடிநின்றவரோ கோவிந்தாவந்தருளும்
மோகினிவேஷங்கொண்டு முக்கண்படைத்தவர்க்கு
காமங்களுண்டுபண்ண கரிமாலேவந்தருளும்
மாதுநான்வருந்துகையில் மாயவரோவந்தருளும்
கோதுநான்வருந்துகையில் கோபாலாவாருமையா
என்றுமவள்முறையிடவே யெம்பெருமாள்தானறிந்து
கெருடன்மேலேறியல்லோ கேசவரும்வாராரோ
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டார்மாயவரும்
பாஞ்சாலியருகில்வந்து பாரளந்தாரேதுரைப்பார்
ஏதுக்கெனையழைத்தாய் என்பிறப்பேதங்கையரோ
அழைத்தநல்லகாரியத்தை யாரணங்கேசொல்லுமம்மா
அப்போதுரோபதையு மாயருக்கேதுசொல்வாள்
அத்திபுரம்நான்போய் அவரையும்பார்க்கவேணும்
மலைக்குறத்திவேஷங்கொண்டேன் மைந்தருகில்லை
கைக்குழந்தைவேணுமென்றாள்கரிமேகாஅண்ணாவே
ஐவர்க்கிளையவனா அருச்சுனனார்தம்பியனா
சாயாம்புமேனியனா சகாதேவராசாவை
எனக்குக்குழந்தையாக எம்பெருமாளுண்டுபண்ணும்
கைக்குழந்தைபோலேயல்லோ கரிமேகர்வுண்டுபண்ணும்
என்றுமந்தபாஞ்சாலி யெம்பெருமானைக்கேட்க
மாயர்மனமிரங்கி மைந்தர்வடிவுதந்தார்
அருச்சுனனார்தம்பியனை யாண்குழந்தையாக்கிவிட்டார
இளையசகாதேவ னேந்துங்குழந்தையானான்
மாயாருளாலே மைந்தன்வடிவுகொண்டான்
கோபாலர்தன்னருளால் குழந்தைவடிவெடுத்தான்

அப்போதுதுரோபதையாள் ஆயனைக்கைதொழுது
மாயர்பாதம்பணிந்து மைந்தனைத்தானெடுத்து
மலைக்குறத்திபோலாகக் கட்டினாள்பாலகனை
கூடையிடுப்பில்வைத்தாள் குழந்தைமுதுகணிந்தாள்
கையில்பிரம்பெடுத்துக் கட்டுவச்சிபோலாக
பொன்னுமலைக்கட்டுவச்சி போலேயவள்நடந்தாள்
அன்னநடைநடந்து அருங்கிளியாள்போகலுற்றாள்
அவளன்னநடையழகைக் கண்டந்தஆணழகர்
பஞ்சவரும்மாயவரும் பார்த்துமனமகிழ்ந்தார்
காரிகையாள்நாயகியைக் கண்டுமனமகிழ்ந்தார்
தோராவடிவழகி துரோபதையாளப்போது
ஐவருக்கும்மாயவற்கும் அடிவணங்கிதெண்டனிட்டாள்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டாள்
ஐவர்களுந்தான்பார்த்து அழகாகவுதுசொல்வார்
காரிகையாள்துரோபதைக்குக் கண்ணெச்சிலாகுதென்று
ஏழுலகமாளுகிற எம்பெருமாள்அப்போது
பூமியைக்கிள்ளியல்லோ பொட்டிட்டார்துரோபதைக்கு
திஷ்டிசுழற்றியவர் தெருவெங்கும்விட்டெறிந்தார்
மாயவரும்ஐவரும் மனதுமிகக்குளிர்ந்து
போய்வாருமென்றுசொல்லிப் புகழ்விடைகொடுத்தார்
விடைபெற்றுப்பாஞ்சாலி விடுபட்டாளங்நேரம்
போனாளேதுரோபதையாள் பூமணக்கவேர்மணக்க
மைந்தர்முதுகணிந்து மயிலனையும்வாராளே
குழந்தைமுதுகணிந்து கூடையிடுப்பில்வைத்து
பிரப்பங்கோல்கைப்பிடித்து பெருமையுடன்வாராளே
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சஞ்சோலைவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதளம்பூச்சோலைவிட்டு
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
காரைபெருத்தவனம் காட்டுகிளாபூர்த்தவனம்
சூரைமுளைத்தவனம் சுருண்டைக்காய்காய்க்கும்வனம்
அல்லியுந்தாமரையும் அடர்ந்தவனந்தாண்டி
கோகிலமுந்தாராவுங் குலாவும்வனந்தாண்டி
அன்னமுந்தாராவும் அசையும்வனந்தாண்டி
அத்திப்புரந்தேடி வந்தாளேஆணழகி
தாமமுடியாளும் தயிலாட்டான்வீதிவிட்டு
கட்டழகிதுரோபதையாள் கருணரிடவீதிவிட்டு
சாமத்துரோகியல்லோ சகுனியிடவீதிவிட்டு
நூலால்கலிந்திரனார் நூற்றுவர்வீதிவிட்டு
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வீதிவந்தாள்
அந்தத்தெருக்களிலே வாழ்கின்றமன்னரெல்லாம்
இளமைமுதுமையுள்ளார் எல்லாருந்தான்கூடி
வயதுசென்றமன்னர்களும் வாலீபவீரர்களும்

எல்லாருமொன்றாக இவளைவந்துசூழ்ந்தார்கள்
நாத்தப்பழங்களெல்லாம் நாடிவந்துஏதுசொல்வார்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
மலையிற்குறத்தியரோமயிலனையேநாயகமே
எங்களிடமாளிகைக்கு ஏகிவந்தாயாமானால்
வண்ணமணிமாளிகைக்கு வந்திருந்தாயாமானால்
நீ-ஆடுங்கழலாடி அம்மானைதானாடி
பந்தாடிச்செண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் உஞ்சல்மிகவாடி.
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
சொக்கட்டான்சூதாடி சொகுசாகவாழ்ந்திருப்பாய்
எங்களிடபெண்டுகளை யுனக்கேவல்செய்துவைப்போம்
ஆணாய்ப்பிறந்தவர்கள் ஆனபணிசெய்திருப்போம்
தேவாவமுர்தம்நீ தேவையென்றுசொன்னாலும்
கொண்டுவந்துதாங்கொடுத்துக் கும்பிட்டுவீற்றிருப்போம்
பாலும்பழமுமுண்டு பஞ்சணையின்மேல்படுத்து
நீ-கட்டிலின்மேல்வீற்றிருந்தால் கால்பிடித்துநாமிருப்போம்
பஞ்சணைமேல்நீயிருந்தால் உன்பாதம்பிடித்திருப்போம்
மனையாளிடவார்த்தை மர்மம்நாம்கேட்டதில்லை
பெண்களிடவார்த்தை பிரியமென்றுகேட்டதில்லை
உன்சொல்லைமேலாக எண்ணிமிகநடப்போம்
உன்மனதுக்கிசைந்தபடி நடப்பேண்டிகட்டுவச்சி
வாராயோபெண்மயிலே என்றுமவரழைத்தார்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குஏதுசொல்வாள்
மலைக்குறத்திபோலாக வாய்திறந்துஏதுசொல்வாள்
கூவுங்குயில்போலே கொம்பனையாளேதுரைப்பாள்
வாய்திறந்தமன்னருக்கு மறுவார்த்தைசொல்லுகிறாள்.

குறம்.

ஏன்காணுமன்னர்களே இப்படிக்குச்சொன்னீர்
என்குறவன்தானறிந்தால் ஏதுபிழைவருமோ
குலமன்னர்கள்நீங்களானால் குறத்தியைப்பார்த்து
குணங்கெடுக்கலாமோதான் கொற்றவரேகேளும்
ஜவானகெந்தருவ னெனக்குமணவாளர்
அவனறிந்தால்பழுதுவரும் அரசர்களேபோம்போம்

எந்தனுக்குஏவல்செய்து எனையாள்வந்திர்
ஏவல்பணிசெய்வதற்கு எட்டுலட்சமுண்டு
ஏழுபேர்எந்தனுக்கு சக்களத்திமார்கள்
இன்னமுண்டுஎன்கணவனுக்கு எண்ணத்தொலையாது
எங்களதுகுறச்சாதிஏச்சானசாதி
எங்களுக்குமேலானஅரசர்களேகேளும்
வெள்ளைஎலிக்கறிசமைத்துவிருந்துகளைசெய்வோர்
விஸ்தாரஆமையுடன்கீரிப்பிள்ளைதின்போம்
கொக்குநரியுடனடித்துக்கூட்டுக்கறிசமைப்போம்
கொண்டுமுயல்தானபிடித்துகுழம்புபலசெய்வோம்
காட்டெருமைபன்றியுடன்கறிசமைத்துதின்போம்
கண்டகண்டமிருகமெல்லாம்உப்புக்கண்டமிடுவோம்
பெருச்சாளிதான்பிடித்து பொரியலதுசெய்வோம்
பெரும்பூனையதுபிடித்துவிருந்துசெய்வோம்நாங்கள்
பாம்புதின்போம்பல்லிதின்போம்பச்சோணான்சுடுவோம்
பலதினுசுமிருகமெல்லாம்பார்த்துச்சமைத்திடுவோம்
இன்னம்பலமிருகங்கள் எடுத்துக்கறிசமைப்போம்
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறக்கூட்டம்
நல்லகுலந்தனிலுதித்தரசர்களுமானால்
நாட்டிலுள்ளகுறத்திகள்மேலாசைவைக்கலாமோ
ஒருவன்பெண்டைமற்றொருவனநத்திவந்தானானால்
உலகளந்தார்தன்னருளால்சுவர்க்கமில்லைஎன்பார்
குருவினிடபத்தினியபஹரித்துவந்தானானால்
கோபாலர்தன்னருளால்கூடுமென்பார்நரகம்
அண்ணனிடதேவியனை அடுத்துவந்தானானால்
அரிராமசக்கிரமேஅவன்தலையைஅறுக்கும்
இப்படியாயுரைப்பார்கள்ஏழுலகந்தனிலே
எல்லாமறிந்தவர்கள்எனைத்தொடலாமோ
கொற்றவரேயுங்களுக்குதேவியர்களில்லையோ
கூசாமல்உங்களிடமனையிடத்துச்சேரும்
மன்னர்களேயுங்களுக்குமனையாளுமில்லையோ
மகாராஜர்பிள்ளைகளேமனையிடத்தில்போம்போம்
கீரிதின்னும்குறத்தியின்மேலாசைகொண்டீர்நீங்கள்
கீர்த்தியல்லோஉங்களுக்குஎழுந்துநடப்பீரோ
ஆமைதின்னுங்குறத்தியின்மேலாசைகொண்டீர்நீங்கள்
அதுமுறைமையல்லகண்டாய்அணுகாமல்நடவும்
என்றுமவள்மிகவுரைத்துஇணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திசாயலைப்போல்இடைதுவளநடந்தாள்

வேறு.

அப்போதுபூங்குறத்திஅழகானகட்டுவச்சி
மாலைக்குறத்திமலைகுறத்திபோய்நடந்தாள்
மலைக்குறத்திபோனபின்புமன்னர்மனந்தளர்ந்து
நெஞ்சுலர்ந்துநாவறண்டுநினைவுதடுமாறி
அவரவர்கள்தொழில்மறந்துஅசைந்துநடைநடந்து
சாதித்தொழில்மறந்துதானேநடக்கசைந்து
பூசைத்தொழில்மறந்தார்புஷ்பமெடுக்கசந்தார்
இருந்தவிடமொழியஎழுந்துநடக்கறியார்
கானக்குறத்தியினால்காமம்பெரிதானார்
மாலைக்குறத்தியினால்மையல்பெரிதானார்
வாய்பேச்சுத்தான்குளறிமயங்கிவிழுந்தார்கள்
தங்கள்நினைவுகேட்டுத்தான்படுத்தார்பூமியிலே
இப்படியாகவல்லோஇவரிருக்கும்வேளையிலே
அப்போதுபூங்குறத்திஅந்தத்தெருதாண்டி

(கருணன்வீதிவருவது)

கருணரிடவீதியிலே கட்டுவச்சிஏதுசொல்வாள்
வாரதொருபூங்குறத்தி மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
இவ்வீதிவாழுகிற இளவிசயர்பெண்டுகளே
கைப்பார்த்துக்கொள்ளலையோ கனத்தகுறிகேட்கிலையோ
பச்சை:யதுகுத்திக் கொள்ளலையோபைங்கிளிகள்
உரிசயறுவாங்கலையோ வுஞ்சல்கயர்கொள்ளலையோ
தாம்புகயர்கொள்ளலையோ தார்வேந்தர்வீதியிலே
ஓலைநிலுகிலுப்பைகொள்ளலையோபிள்ளைகட்கு
ஐங்காயத்தூளதுதான் வாங்கலையோஆச்சிமரே
பலநோவுக்காரருக்கு பச்சிலைகள்கொள்வலையோ
தாள்நோவுக்காரருக்கு தான்மருந்துகொள்ளலையோ
இப்படியாய்க்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
அப்பெரியவீதியிலே வாழும்மனிதரெல்லாம்
சிறியோர்கள்பெரியோர்கள் சேர்ந்தாரொருபுறமாய்
வாலைப்பிராயமுள்ள ராசரெல்லாந்தான்பார்த்து
காமக்குறத்தியை கண்டுமயலானார்
பாவைகுறத்தியை பார்த்துமிகமயங்கி
குறத்தியழகைப்பார்த்து கொற்றவர்களேதுசொல்வார்
கண்டீரோமன்னர்களே காமக்குறத்தியை
பார்த்தீரோராசர்களே பாவையழகுதன்னை

இப்படியாய்ப்பெண்டுகளை எங்கிலும்நான்கண்டதில்லை
தெய்வலோகம்வாழுகின்ற இந்திராணியீடல்லவே
இராமருடன்தேவி சீதையெதிரல்லவே
அகலிகைமண்டோதரி யாருமெதிரல்லவே
இரம்பையூர்வசியும் நல்லதிலோர்த்தமையும்
தரனியமாலியரும் தருந்தகருணைவதியும்
இந்தக்குறத்தியர்க்கு ஈடுசொல்லலாகாது
கானக்குறத்தியர்க்குக் கட்டுரைக்கலாகாது
இவளழகும்பாவனையு மெங்கிலுங்கண்டறியோம்
திருவழகுமொப்பனையும் தேசத்தில்கண்டறியோம்
இப்படியாய்ச்சொல்லியல்லோ எல்லவருமோடிவந்தார்
மாலைக்குறத்திமலைக்குறத்திமுன்னேவந்தார்
கானக்குறத்திமுன்னே வந்துமவரேதுசொல்வார்
ஆரோடிகட்டுவச்சி அன்னமேபூங்குறத்தி
எவளோடிகட்டுவச்சி யிந்தத்தெருவில்வந்தாய்
உன்னழகைக்கண்டலவோ வுருகுதடியெங்கள்மனம்
(உன்) வடிவழகைக்கண்டலவோ மயங்கித்தவிக்கிறோம்
எங்களிடமாளிகைக்கு வந்தாயேயாமானால்
கட்டநல்லபட்டுமுண்டு கழட்டப்பணிதியுண்டு
போடவுடமையுண்டு பூட்டப்பணிதியுண்டு
அத்தருண்டுபுட்பமுண்டு அதற்சேற்றகட்டிலுண்டு
பூசப்புனுகுமுண்டு புகழானகந்தமுண்டு
அன்னவுஞ்சல்மேலேயாடலாமெப்போதும்
உன்னைப்பிரியாம லுகந்துவிளையாடிருப்போம்
ஏவல்பணிசெய்து எப்போதும்வீற்றிருப்போம்
என்காணும்கட்டுவச்சியிளங்குறத்திநாயகமே
வாராயோவெங்களிடவர்னமணிமாளிகைக்கு
என்றுமவர்கேட்கஇளங்குறத்திகட்டுவச்சி
மலையாளப்பூங்குறத்திமன்னவருக்கேதுசொல்வாள்

குறம்.

என்காணுமன்னர்களேயிடக்குகளைச்சொன்னீர்
இந்நாட்டில்வாழுகின்றகுறத்தியல்லநானும்
பலசாதிக்குறத்தியைப்போலெண்ணியேதானுரைத்தீர்
பரமசிவன்பார்வதிக்குங்கைபார்க்குங்குறத்தி
கானகத்தில்வாழுகின்றகுறத்தியைப்போல்நினைத்தீர்
கந்தருக்கும்வள்ளிபார்க்குங்கைபார்க்குங்குறத்தி
இந்நாட்டில்வாழுகின்றகுறத்தியல்லநானும்

இந்திரர்க்கும்தேவியர்க்குங்குறிசொல்லுங்குறத்தி
என்னையர்தெரியாமலனியாயஞ்சொன்னீர்
இந்நாட்டுக்குறத்தியர்போலிடைந்துடப்பீரோ
என்குறவனைவர்கண்டால்இப்பொழுதுதன்னில்
இந்தக்ஷணமுங்கள்மண்டையுருளவடித்திடுவார்
குறவரிடகூட்டமெல்லாம் அடியோடேவந்து
கொற்றவனார்சீமைதனைச்சுட்டெரிக்கப்போறார்
குறச்சாதியென்சாதியிழிவானசாதி
கொற்றவரோநானுமக்குக்கட்டுமோதான்சொல்லும்
குறநாற்றமுங்களுக்குக்குமட்டியடியாதோ
கொம்பனையாள்மேலாசைதோன்றுதோதான்சொல்லும்
கருணரிடவீதிதன்னிலதர்மங்களுண்டாச்சோ
கட்டழகர்கூடியேயென்கைபிடிக்கவந்தீர்
கருணரிதைத்தானறிந்தால்கடும்பகைகள்நேரும்
காளைகளேயுங்களுக்குக்குடிப்பழுதும்வருமே
இச்சையுடனித்தெருவில்பிச்சைக்குநான்வந்தேன்
எந்தனையும்நீங்களெல்லாம்பெண்டழைக்கலாமோ
சமுசாரியானவளைத்தேடியேபெண்டழைத்தால்
தன்குடிக்குப்பழுதுவருமென்றெண்ணிடவும்
ஒருவனிடதேவிதன்னைஒருவனத்தியழைத்தால்
உடனேயவன்றன்றலைக்குப்பழுதுவருமென்பார்
பிறருடையபெண்டுகளைப்பேதப்படநினைத்தால்
பெருநாகமடைவாரென்றுபெரியோர்கள்சொல்வார்
இப்படியாயுலகுதனில்அறிவழிந்தமாந்தர்
எத்தனையோகோடியுண்டெனக்குத்தெரிந்தளவு
ஸ்ரீராமர்தன்னுடையதேவியருளாலே
தென்னிலங்கைராவணனும்க்ஷணத்தில்மடிந்தானே
அகலியவள்தன்னாலே ஆயிரங்கண்ணுடையான்
அவளாசைதன்னாலேபூனையைப்போல்நடந்து
உள்நுழையும்வேளையிலேகௌதமருங்கண்டு
ஒப்பாதமனங்கொதித்துமெய்ப்புடனேயவரும்
தேவேந்திரனென்றறிந்துசீறியந்தமுனியும்
சீக்கிரமாயவன்கேட்கவாக்குரைத்தாரவரும்
இந்திரன்றன்றேகமெல்லாம்யோனியாகவென்று
இட்டாரேபெருஞ்சாபமெல்லையுலகறிய
கௌதமர்சாபத்தினால்இந்திரனும்நொந்து
கிலேசங்கொண்டவருடையபாதத்தில்விழுந்தான்
சாஷ்டாங்கதெண்டனிட்டுச்சரணமென்றுபணிந்து
சுவாமியெனைக்காருமென்றுமிகவணங்கியுரைத்தான்
என்றுமிவன்றுனைக்கக்கௌதமருமிரங்கி
இந்திரனார்தேகமெல்லாம்விழியாகவென்றார்
அன்றுமுதலின்றளவுகௌதமனருளையால்

ஆயிரங்கண்ணிந்திரனென்றுசொல்லுமுலகம்
தேவேந்திரன்போனபின்புகௌதமனார்தாமும்
தேவியைத்தாமழைத்துமிகவுரைப்பாரவட்கு
எண்டிபெண்ணேயகலிகையேயிந்தமதியுனக்கு
இந்திரன்தன்மேலாசைகொண்டிருந்தாயென்றார்
அந்தவுரைகேட்டுமவள்பயந்துமிகத்தியங்கி
ஆண்டவனேநான்செய்த குற்றமதைக்கேளும்
நித்திரையாலெந்தனுக்குநினைவுதடுமாறி
நீரென்றுமவனென்றும்நானறியேனென்றாள்
என்றுமிவள்தானுரைக்கக் கௌதமரும்வெகுண்டு
இவளையொருகற்பாறையாகவென்றுசபித்தார்
இட்டதொருசாபத்தினால்அகலிகையும்பார்த்து
இவருடையபாதமதில் மிகநோக்கிவிழ்ந்தாள்
ஆண்டவரேயெங்குருவேஐயாவேசுவாமி
அடியவள்நான்செய்ததொருகுற்றம்பொறுத்தருளும்
இட்டதொருபெருஞ்சாபம்எப்பொழுதுதீரும்
எந்தனுக்குவுரையுமென்றுமிகநோக்கிப்பணிந்தாள்
என்றுமவள்தானுரைக்கமிகமனதில்மகிழ்ந்து
ஈரேழுவுலகமெல்லாம்ஆளுந்தெசரதனால்
ஸ்ரீராமதசரதர்க்குப்புத்திரராய்ப்பிறந்து
செல்வமுள்ளபனிரண்டுவயதுள்ளநாளில்
இராசரிஷியானவரும்யாகமதுவுரைத்து
தெசரதனார்தன்னருகில்தேடியவர்வந்து
ஸ்ரீராமலட்சுமணரையனுப்பவென்றுகேட்க
தெசரதனுந்தான்மகிழ்ந்துஸ்ரீராமர்தனையும்
சுந்தரமானலட்சுமணரையிருவரையுமனுப்ப
இராசரிஷிமனமகிழ்ந்துநலமாகநடந்தார்
இராகவரும்லட்சுமணரும்கூடவேதான்தொடர்ந்தார்
இராசரிஷிதன்னுடனேமூவருமாய்வந்து
இராமருடன்லட்சுமணரும்வாசஞ்செய்தாரங்கே
இவரிருக்கும்வேளையிலேதாடகையும்வந்தாள்
இவளாருவெனவுரைத்தார்ஸ்ரீராமர்தானும்
எடுத்துரைப்பாரந்நேரம் இராமருக்குரிஷியும்
என்னுடையயாகமதைகலைக்கவந்தபீடை
இவளுயிரைவாங்குமென்றுவுரைத்தாரந்தமுனியும்

குருவுரைத்தவாக்யமதைக்கோபாலறிந்து
கொப்பெனவேவில்லெடுத்துக்குணத்தொனியேசெய்து
தாடகையைவிழவடித்துமாரீசன்றன்னை
தகைமையுடனுயிர் வதைத்துத்தகைமையுடனடந்தார்
விஸ்வாமித்ரர்தன்னுடனேவேண்டியிருவர்களும்
விஸ்தாரமானதொருவழிநடந்தார்மூவர்
மிதுலைப்பதிநோக்கியல்லோவருகின்றவழியில்
மிதித்தாரேயகலிகையாள் கற்பாறைதன்னை
பாதம்பட்டவுடனேயவள்மேதினியிலெழுந்து
பத்தியுடன்சூழ்ந்துவந்துநமஸ்கரித்தாளவளும்
இராகவருந்தான்பார்த்திவளாரென்றுரைக்க
இராசமுனியானவரும்ராமருக்குவுரைத்தார்
அப்போதகலிகையுமண்டலமெல்லாம்புகழ
ஆனந்தமாகவந்துகௌதமரைப்பணிந்தாள்
அகலிகையுங்கௌதமருங்கூடிமிகவாழ்ந்து
கோபாலர்போலுஞ்சிலபிள்ளைகளும்பெற்றார்
இப்படியாயுலகுதனிலெத்தனையோகோடி
எந்தனைப்பெண்டழைக்கவந்தீர்மன்னர்களேபோம்போம்
ஆணாலேகெட்டவர்களாருமில்லையுலகில்
அவகேடுபெண்ணாலேவருமென்றுசொல்வார்
இப்படிக்குறத்தாளுரைத்துஇடைதுவளநகைத்தாள்
இளங்குறத்திதனைப்போலஇடைதுவளநகைத்தாள்

வேறு.

குறத்தியவள்போனபின்புகொற்றவர்களெல்லாரும்
மாதுமயலாலேவாடிமனந்தளர்ந்து
தையல்மயலாலேதங்கள்முகம்வாடி
காமன்கணையாலேகளைபட்டுப்போய்விழுந்தார்
நினைவுதடுமாறிநெஞ்சுலர்ந்துவாயுலர்ந்து
படுத்தபடுக்கையிட்டார்பார்மன்னரெல்லவரும்
குறத்தியவளாலேகொற்றவர்போய்ப்படுத்தார்
மலைக்குறத்திதன்னாலேமாதைமறந்தார்கள்
கட்டுவேச்சியவளாலேகைகாலசந்தார்கள்
தங்களதுதேவிகளைத்தாமறந்தாரப்போது
ஒருவர்பேருரைப்பார்கள்மறுபேரழைப்பார்கள்
உணர்வுதடுமாறியுற்றசீவன்தான்குலைந்தார்

நினைவுதடமோறி நித்திலங்குபூமுடியார்
திண்டிமறந்து தெருத்திண்ணைபோய்படுத்தார்
குறத்திகுறத்தியென்றுகொற்றவர்கள்தாமிருப்பார்
மலைக்குறத்திவந்தாளென்று மன்னரெழுந்திருப்பா
கட்டுவச்சிவந்தாளென்று கண்ணெடுத்துப்பார்த்திருப்பார்
குறத்திகுறத்தியென்று குலைகுவாமன்னரெல்லாம்
இப்படியாகவிருக்குமந்தவேளையிலே

(திரிபோதனன்வீதிவருகிறது.)

மாலைக்குறத்தியவள் மலைக்குறத்திகட்டுவச்சி
வேலைப்பழித்ததொரு விழியாள்நடக்கலுற்றாள்
தேசத்தையாளுமந்த திரியோதனன்வீதியிலும்
நூலால்கடுந்திறளார் நூற்றொருவர்வீதிவந்தாள்
வாரக்குறத்தியவள் மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொப்பின்கிளியதுபோல்
உரிக்கயிர்வாங்கலையோ வுத்தமியாள்பெண்டுகாள்
சவரிமயிர்கொள்ளலையோ தார்வேந்தர்பெண்டுகாள்
மாப்பிள்ளைக்கேற்ற மருந்துண்டுகொள்வீரோ
புருஷருக்கேற்றபொடியுண்டுவாங்குவீரோ
என்றுமவள்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
(அப்போதிரி)யோதிரன்வீதியிலேசிலமன்னர்தான்பார்த்து
காமக்குறத்தியைக் கண்டுமயலாகி
இவளார்காண்கட்டுவச்சி இவ்வீதிவந்தவள்தான்
கட்டுவச்சிப்பேரழகைக் கண்டீர்களோமன்னர்களே
இந்நாட்டுக்குறத்தியல்ல இவ்வீதிவந்தவள்தான்
மேல்நாட்டுதனில்வாழும் குறத்தியைபோல்காணுகுது
கெந்தருவர்தேவர்களோ காமனிடபத்தினியோ
தேவேந்திரனுடைய திருவுளத்தால்வந்தவளோ
ஈஸ்வரனார்தன்னிடத்தில் இருக்குங்குறத்தியரோ
பார்வதியாளம்மனுக்கு பார்த்துக்குறிசொல்பவளோ
மகாவிஷ்ணுதன்னுடைய மனதுகுறிசொல்பவளோ
இலட்சுமியாள்தன்றனக்கு நேர்ந்தகுறிசொல்பவளோ
ஐயன்பிரமதேவனுக்கு ஆனகுறத்தியரோ
சரஸ்வதிநாயகிக்குசகலகுறிசொல்பவளோ
மயிலேறும்வேலவற்குமனதுகுறிசொல்பவளோ
தெய்வானைவள்ளியர்க்கு தேர்ந்துகுறிசொல்பவளோ
இவளழகைப்பார்ப்பதற்கு இருகண்கள்போதாது
புத்தகத்தைமாற்றடிக்கும் புறங்காலின்வடிவழகும்

பூஞ்சிலப்புதண்டைகளும் புலம்பும்கடையழகும்
முத்துச்சிப்பிதன்னிறம்போல் முழங்கால்ரண்டழகும்
ஈனுதவாழை யிளவாழைத்தண்டதுபோல்
இளவாழைத்தண்டதுபோல் இருதுடையிரண்டழகும்
ஆலிலைபோலே அமைந்தவயிறழகும்
குரும்பைநுழையாத கும்பத்தனத்தழகும்
கோத்தமுத்திலேதளர்ந்த கொங்கையிரண்டழகும்
முருக்கம்பூயிதழதுபோல் உதட்டழகும்பாவனையும்
முத்தணிந்தபல்லும் முகத்தழகும்ஒப்பனையும்
வட்டமுகமும் மகாசிதன்னிறமும்
வண்ணத்திருத்தோளும் கோத்தப்பணியழகும்
அவனிபதினாலு லோகந்திரிந்துவந்தோம்
இவளழகுக்கொப்பானர் யாருமுலகிலில்லை
என்றுமிவர்கள்சொல்லி இவளைவந்துசூழ்ந்தார்கள்
குறத்தியருகில்வந்து கொற்றவர்கள்ஏதுசொல்வார்
வாடிகுறத்தியெங்கள் வர்ன்னமணிமாளிகைக்கு
கால்பிடிப்போம்கைப்பிடிப்போம் கனத்தபணிசெய்திடுவோம்
வேண்டியுனைத்தொழுது வேணபணிசெய்திருப்போம்
ஆணாய்ப்பிறந்தவர்கள் அடப்பங்கட்டிநின்றிடுவோம்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் வேணதொழில்செய்திடுவோம்
ஆலங்காய்நீராடி அம்மானைதானாடி
பந்தாடிச்செண்டாடிப் பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
பளிங்குமாமண்டபத்தில் பாங்காகவீற்றிருப்பாய்
உந்தன்மேலாசைகொண்டு வுழன்றுதிரிகிறோமே
பூங்குறத்திஉன்னாலே பெண்பிள்ளைதான்மறந்தோம்
அருங்குறத்திஉன்னாலே அன்னந்தண்ணீர்தானமறந்தோம்
உன்னாசைகொண்டுமல்லோ சன்யாசியானோமே
தாயைமறந்தோமடி சகலமையுந்தான்மறந்தோம்
வாடிக்குறத்தியென்று மையல்கொண்டார்மன்னரெல்லாம்
அப்போகுறத்தியவள் அருங்கிளிபோல்வாய்திறந்து
மன்னர்முகம்நோக்கி மலைகுறத்திஏதுசொல்வாள்

குறம்.

வாடியென்றும்போடியென்றும்வழிமறித்துஎன்னை
வம்புதும்புஞ்சொல்லவந்தீர்மன்னர்களேபோம்போம்

நட்பமறியாமலென்னைசொற்பமென்றுமதித்திர்
கலியாணஞ்செய்பலையோகாளைகளேயுமக்கு
கன்னியின்மேல்குறத்தியின்மேல்மையல்கொண்டீர்நீங்கள்
அழியாதநரகமெல்லாம்மறைநூலில்சொல்லும்
அண்ணன்றம்பிதேவியர்மேலாசைகொள்வானால்
ஆகாதநரகந்தனில்அழுந்திடுவார்பாந்தர்
குருவினதுபத்தினியும் ஆசைகொண்டாளல்லோ
கொள்ளாதநரகமதில்கூடியழுந்திடுவார்
இப்படியாயுலகுதனில் அழுந்தவர்கள்கோடி
இருமூடங்கொண்டவரே யிடைந்துநடப்பீர்கள்
என்றுசொல்லிபூங்குறத்திமிகநோக்கிநடந்து
இடைகுலுங்கநடைகுலுங்நடைநடந்தாள்குறத்தி

வேறு

குறத்தியவள்போனபின்புகொற்றப்போர்மன்னவர்கள்
வாடிமனந்தளர்ந்துவண்ணமுகம்வேறுபட்டு
வார்த்தைகுளறியல்லோமறுவே_மானார்கள்
முக்காடுபோட்டுமுடிமன்னர்பள்ளிகொண்டார்
பெண்டுபிள்ளைதான்மறந்து பூமியின்மேல்தான்படுத்தார்
மாதுமயக்கம்பெரிதாச்சுமன்னவற்கு
குறத்திமயக்கம்பெரிதாச்சுகொற்றவற்கு
கன்னிமயக்கமல்லோதலையெடுக்கப்போகாது
அன்னமூந்தண்ணீரும் அருந்தார்கள்மன்னவர்கள்
ஒருவருடன்பேசாமல்உத்தமர்கள்வீற்றிருப்பார்
இப்படியாகவல்லோயிவரிருக்கும்வேளையிலே
மாலைக்குறத்திமலைக்குறத்திபோய்நடந்தாள்
வாராளேபூங்குறத்திமாதர்கள்வீதியிலே
பாடிவருகிறாள்பத்தினியாள்வீதியிலே
குறம்பாடிவாராளேகொம்பனைமார்வீதியிலே
கைபார்த்துக்கொள்ளலையோபச்சைபொட்டுகுத்தலையோ
குறியொன்றும்கேட்கலையோகொம்பனைமார்பெண்டுகளே
கூடாதபெண்களுக்குகூட்டிவைக்கமருந்துகொள்வீர்
சேராதபெண்களுக்குசேரமருந்துமுண்டு
வாழாதபெண்களுக்குவாழமருந்துண்டைகொள்வீர்
உத்தம்விலக்கவென்றால்மெத்தமருந்துமுண்டு
சண்டைகெலிப்பதற்குசார்ந்தகுளிகையுண்டு
எதிரிமயங்கவல்லோஎன்கைமருந்துமுண்டு
நரைத்தநல்லகூந்தலதுகறுக்கமருந்துமுண்டு

தளர்ந்தஸ்தனம்நிமிரதகுந்தமருந்துமுண்டு
என்றுமவள்பாடிஇளங்குறத்திவாராளே
மாநகரமாளுகின்ற மகாராசன்தேவியரும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
நூற்றொருவர்பெண்டுகளும்வேற்றுமைகளில்லாமல்
சொக்கட்டான்சூதுசதுரங்கந்தானாடி
அம்மானைபந்து அழகுகழலாடி
ஆலங்காய்தானாடி ஆலித்துச்செண்டாடி
பந்தாடிசெண்டாடிப்பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில்உஞ்சலுதைத்தாடி
பளிங்குமாமண்டபத்தில்பைங்கிளிமார்வீற்றிருந்தார்
கொம்பனைமார்களெல்லாம் கூடிவிளையாடினார்கள்
வோரகத்திமார்களெல்லாம்ஒருமித்துஅங்கிருந்தார்
இப்படியாகவிருக்கின்றவேளையிலே
வீதியில்பாடியல்லோவருங்குறத்திசேதிசொல்வோம்
பெருந்திருவாள்வீதிப்படிவாசல்காத்திருக்கும்
வாசற்படிகாக்கும் மயிலனைமார்தாதியர்கள்
குறத்திவருமழகைப்பார்த்திந்தகொம்பனைமார்
ஒருத்திக்கொருத்தியுறவாகியேதுசொல்வார்
கண்டீரோஅக்கமாரேகட்டுவச்சிபேரழகை
பார்த்தீரோதங்கைமாரேபூங்குறத்திதன்னழகை
சாய்ந்தநடையழகும் சதுரானகைவீச்சும்
ஒய்ந்தநடையழகும்உருட்டிவிட்டபார்வைகளும்
கோத்தகழுத்தழகும்கொண்டையின்மேல்பூவழகும்
தளூர்ந்தசவுளிகளும்தாள்பூட்டுசங்கிலியும்
முன்கைமுதாரிகளும்மோதிரம்பொன்னுருட்டுகளும்
தங்கப்பதக்கமும்தகதகெனமின்னிவர
மார்பில்சரப்பளியும்தோளில்புரண்டாட
அக்குமணிதாவடங்கள்ஆபரணஞ்சோதிமின்ன
பச்சைமணியழகும்பலகரைத்தாவடமும்
இந்தக்குறத்தியனையிணையழகுகண்டீரோ
இந்நாட்டாளல்லவிவள்இத்திசையும்அல்லவென்றார்
தென்னாட்டுச்சூழலல்லோதீவிலிருந்தவள்காண்
தெய்வக்குறத்தியிவள்தெளிவறிந்தகட்டுவச்சி
நினைத்தகுறியுரைப்பாள்நிலமையுள்ளபூங்குறத்தி
ஆய்ச்சியாண்மனைக்குஅழைத்துமெள்ளச்சென்றாலே
கட்டழகிமாதரெல்லாம்கைகாட்டிகுறிகேட்பார்
என்றுசிலதாதியர்கள் எழுந்திருந்துஉள்நுழைந்து

அரண்மனைவழுகட்டு மங்கப்புரங்கண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
செம்பொன்றிரைநீக்கி சேரவந்துகெண்டனிட்டு
அம்பொன்றிரைநீக்கி அழகாகக்கெண்டனிட்டு
கெண்டனிட்டுக்காதியருஞ் சேரவெழுந்திருந்து
மோதிரமின்னவல்லோ முடிமேலேகைதொழுதார்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
நீ-யார்பெண்ணேசாதி அறியவுரையுமென்றார்
எவர்பெண்கள்சாதி எனக்கறியவுரையுமென்றார்
காதியவளகேட்டு தையலர்க்குவந்துசொல்வாள்
ஆர்பணியுமல்லவள்நான் அடியேனுன்பணிதான்
பெரியோருடைய பெருமாளேவுன்பணிதான்
மாநகரமாகிற மகாராசர்சொற்படிக்கே
உங்களாவீதிடடி காக்கிறகாதியென்றாள்
பேரால்மிகுக்கவொரு பெருந்திருவாள்தான்கேட்டு
நீயிங்கேவந்தகொரு காரணத்தைச்சொல்லுமென்றாள்
எதுக்காய்வந்தாய்நீ எனக்கறியக்கூறுமென்றாள்
தையலுரைகேட்டுக் காதியருமேதுசொல்வாள்
ஆய்ச்சிநீர்கேளுமடியேனொருவார்த்தை
என்னாய்ச்சிநீர்கேளும் இன்னமொருவார்த்தை
காணுவதிசயங்கள் கண்டுவந்தேன்வீதியிலே
பாராவதிசயங்கள் பார்த்துவந்தேன்வீதியிலே
தேசத்தையாளுகின்ற திரியோதிராசன்
அவர்க்குமொருஐயாண்டு எனக்குமொருமூவாண்டு
வாளெடுத்துக்கைகொடுத்து வாசலிலேநில்லுமென்றார்
வாள்கொடுத்தநாள்முதலாய் வுன்வாசல்காத்திருந்தேன்
அன்றொருநாளின்றளவு மணிவாசல்காத்திருந்தேன
மண்டலத்துப்பெண்களெல்லாம் வாராதபேர்களில்லை
சீமையிலுள்ளபெண்கள் சேனபெண்கள்வந்திருப்பார்
பட்டமாசாளும் பத்தினிமார்வந்திருப்பார்
அந்தரத்துப்பெண்களனேகம்பேர்வந்திருப்பார்
மேலோகம்வாழுகின்ற மெல்லியர்கள்வந்திருப்பார்
பிச்சைக்குவந்தவர்கள் பேர்சொல்லமாளாது
இரக்கவென்றுவந்தவர்களெத்தனையோகோடியுண்டு
குறிசொல்லவந்தவர்கள் கோடானகோடியுண்டு
இப்படிக்கொத்தவொரு குறத்தியைநான்கண்டதில்லை
காணக்கிடையாது கன்னியிளங்கொடியாள்
பார்க்கக்கிடையாது பத்தினியாள்கட்டுவச்சி

இதுபுதுமைகண்மெல்லோ சொல்லிவந்தேனுந்தனண்டை
அழைக்கத்திருவுளமோ ஆய்ச்சியென்றுதெண்டனிட்டான்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
ஓகத்திமார்கள் முகமுந்துமலர்பார்த்து
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
மாதுகுறத்தியனை வரவழைக்கவேண்டுமோதான்
சம்மதியுண்டானால் தங்கையர்கள்சொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அனைவோருஞ்சம்மதித்து
நாதிமுகம்நோக்கி தையலர்களேதுசொல்வார்
கன்னிகுறத்தியைக் கடுகஅழையுமென்றார்
மாதுகுறத்தியனை வரவழைத்துவாருமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியவள்
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியுமோரடியாய்ப் பததிவழிநடந்து
ஓட்டம்பெருநடையா யோடிவந்தாள்வீதியிலே
கட்டுவச்சிமுன்னேவந்து கன்னியருமேதுசொல்வாள்
குறத்திமெதிரில்வந்து கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மாளிகைவாசலுக்கு
அலாற்கமித்திரனார் நாத்தினிருவர்தேவிகட்கும்
பார்த்துக்குறியுரைத்தால் பாக்கியங்கள்தந்திடுவார்
கண்டுகுறியுரைத்தால கனகமணிதான்கொடுப்பார்
வருகின்றபோகட்டுவச்சி மாளிகைக்குளென்றழைத்தாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமலைக்குறத்தி
நல்லதென்றுசம்மதித்து நடந்தாளேகட்டுவச்சி
அடிசிலம்பும்பாடகமு மசையவழிநடந்தாள்
தண்டைசிலம்பசைய தானடந்தாள்கட்டுவச்சி
ஆடையொதுக்கிவெ ளசைந்துவழிநடந்தாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிவந்தாள்
ஆரண்மனையேழுகட்டு மந்தப்புரந்தாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிவந்தாள்
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்து
குறத்தியவள்வீற்றிருக்க குருஞ்சிமணைபோடுமென்றாள்
மலைக்குறத்திவீற்றிருக்க வட்டமணைபோடுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
ஏலங்கருங்குழல்மார் இட்டார்கள்பூந்தடுக்கு
கோவென்னகட்டுவச்சி குந்துங்காணென்றுரைத்தாள்

அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
கால்மடித்துப்பூங்குறத்தி கைக்கூடைமுன்னேவைத்து,
ஒருகால்மடித்துமவள் ஒருகால்பிறகணைந்து
பிரப்பங்கோல்கைப்பிடித்து பெருந்திருவாட்கேதுசொல்வாள்

குறம்.

நன்மையுண்டுஉன்மனைக்கு நான்வருவதாலே
நாடாளும்ராசருக்கும் பதஇனியேகேளும்
தலைக்குபாங்கெவுளிநின்று சொன்னதினாலம்மே
தனக்குவருஞ்செல்வங்களிற் சொல்லமுடியாது
மார்தனக்குநேராக மனைக்கெவுளிசொன்னால்
மலைராமர்அருளாலே சந்தோஷமுண்டாம்
பெண்களானவர்க்கு யிடதுபக்கந்துடித்தால்
பூமியாசான்வதற்கு பிள்ளைபெறுவார்கள்
மற்றுமுள்ளவலதுபக்கம் மங்கையர்க்குதுடித்தால்
மாறுதபேரிடிகள் வனைந்துமல்லோவருமே
ஆணாய்ப்பிறந்தவர்க்கு வலதுபக்கந்துடித்தால்
அன்றுவட்டாசனையிலே அரசுநிலையாள்வார்
கணத்ததொருயிடதுபக்கங் காலைகட்குத்துடித்தால்
காசினியில்வாழாமல் கைலாசஞ்சேர்வார்
இப்படியாயுலகுதனில் சொல்லுகிறார்பெரியோர்
எண்ணமழைந்தகாரியங்க ளுரையுமென்றாள்குறத்தி

வேறு.

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்
எந்தநாடுங்களுக்கு யிருப்பிடத்தைச்சொல்லுமென்றாள்
வாய்திறந்துகட்டுவச்சி மயிலனையாளேதுசொல்வாள்

குறம்.

எந்தனதுநாடுதனை கேட்கவந்தாயம்மை
இருப்பிடத்தைச்சொல்லுகிறேன் விருப்பமுடன்கேளும்
ஆதியென்றகைலாசநாதரருளாலே
ஐங்கரனார்தன்னருளால் அம்மையுமையருளால்
இந்தநாடெங்களது தென்னாடுஅம்மை
இந்திரருஞ்சூரியரு மிருக்குமெங்கள்நாடு
சூரியருஞ்சந்திரரும் சூழ்ந்திருக்குநாடு
சுத்தமுள்ளபெரியோர்கள் தவம்புரியுநாடு
அந்தணர்கள்வேதியரு மழகானமுனிவர்
அனைவோருஞ்சதாகாலந் தவம்புரியுநாடு
மந்திரங்கள்சாத்திரங்கள் மறையோதுநாடு
மறவாமல்மூவரையுந் துதிக்குமெங்கள்நாடு

சதுர்முகனுமெங்களுக்கு குருவீடம்மை
காளியம்மையாளுவது மெங்கள்நாடு
ஆயிரங்கண்ணுடைவுடன்பிறந்ததமையன்
அவனுடையதுவாரகைதானெங்களநாடு
இந்திரனெங்களது மாமனல்லவம்மை
அப்போதுதெய்வபதி நாங்களரசாள்வோம்
மேகவர்ணனெங்களுக்கு சிறியதகப்பனம்மை
மெய்யானஅவர்பதியை நாங்களரசாள்வோம்
நாகராசனெந்தகப்பன் நாயகமேகனும்
நாகலோகமெல்லாம் நாங்களரசாள்வோம்
அந்தணராளுகின்ற பூமியெல்லாமுழுதும்
அடங்கலுநாமரசாள்வோம் ஒருவரெதிருண்டோ
தென்மதுரைசொக்கலிங்க மென்றகப்பனம்மை
தேவரிடமணிபுரத்தை நாங்களரசாள்வோம்
ஈரேழுபதினாலு லோகமெல்லாம்நாங்கள்
எப்போதுமரசாள்வோ மினியொருவரில்லை
தப்பாமலெங்களது சீமைதனிலம்மை
தளராதொருநாளும் பஞ்சங்களுமில்லை
அட்சயதாலாயிரம்பேர்க் கன்னங்களுமிடுவோம்
ஆதிகயிலாசசிவ சங்கரனாருளால்
மந்திரத்தினால்மாங்காய்ப் பறிப்போமடிநாங்கள்
மாமுனிவர்தன்னருளால் மாயவனார்செயலாம்
தந்திரத்தினாற்றேங்காய் இறங்கவிழச்செய்வோம்
தென்னிலங்கைராமர் தன்னருளாலம்மை
பச்சைமலைக்குடியிருந்து பழங்கள்மிகப்பறிப்போம்
பசிகாலமானாலே பட்டணத்தில்திரியோம்
கொச்சிமலைக்குடியிருந்து சோலைப்பழம்பறித்து
குளிர்காலமானாலே குறியுரைக்கவருவோம்
அக்குமணிகொக்குமணி கொள்ளையடிப்பமம்மை
ஆண்மைவரபுருடனுக்கு மருந்துகொள்ளுவீரா
பச்சைமணியாமைமணி பிச்சையுண்டோவமக்கு
படைமுற்றுஞ்சண்டைவெல்ல வசியமுண்டுகொள்வீர்
இந்நாட்டுக்குறத்தியைப்போல் விச்சைசொல்லமாட்டேன்
எந்நாளுமுமையவட்கு கைபார்க்குங்குறத்தி
உண்மையுள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்று
வண்மையுள்ளதக்கணிடபமேவிடத்திற்சேர்வேன்
ஈரேழுநாளாச்சுதடி தென்மதுரைவந்து
இளங்கொடியாளல்லிபற்கு மிசைந்தகுறிசொன்னேன்
ஐந்தொருநாளாச்சுதம்மா துவாரகைக்குவந்து
அலமேலுமங்கைபற்கு ஆனகுறிசொன்னேன்

பத்தொருநாளாச்சுகடி அத்திபுரம்வந்து
பாவையரேயுங்களுக்கு கைபார்ப்பேன்கீழா
கைகுழந்தைபசியாலே கதறுகடியம்மை
கடுகெனவேமனைபுகுந்து அன்னமள்ளியிடுவாய்
அரிசிளவும்வெற்றிலையு மள்ளியிடுவாயே
அதற்கேற்றபிரமணிட பத்திரியுந்தாராய்

வேறு.

அந்தவுரைகேட்டு அந்தப்பெருந்திருவாள்
தாமக்கருங்குழலாள் தாதியரைக்காணழைச்சாள்
இன்றுமுறைஎந்தனது எழுந்திருந்துமுன்னேவந்தாள்
அழைத்தபணிசொல்லுமென்று அருங்கிளியாள்கெண்டளிட்டாள்
என்னபணிசொல்லுமென்று இளங்கொடியாள்கெண்டளிட்டாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
ஆனக்குறத்தியர்க்கு அன்னம்படையுமென்றாள்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
கைகாலும்சுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்து
ஆக்குமடைப்பள்ளியை அலகிட்டுத்தான்திறந்து
கோட்டைமடைப்பள்ளியைக் குசிட்டுத்தான்திறந்து
முறத்திலேபோட்டு முத்துப்போல்சாதமிட்டு
சுற்றிக்கறியைவைத்து புத்துருக்குநெய்வார்த்தாள்
குத்துப்பருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்தாள்
கட்டுவச்சிமுன்னேவந்து கருங்குழலாள்சொல்லுகிறாள்
மாலைக்குறத்தியரே மலைக்குறத்திவாருமென்று
கட்டுவச்சிநாயகிக்கு கைக்குஜலந்தான்கொடுத்து
உன்-பாலகனுக்கன்னம் படையுமென்றாள்தாதியரும்
அப்போதுகட்டுவச்சி ஆணழகியேதுசெய்தாள்
அன்னமதுவாங்கி ஆரணங்குகட்டுவச்சி
மைந்தனுக்குஅன்னமிட்டு வளநாடிவந்திருக்க
குழந்தைக்குஅன்னமிட்டுக் கொம்பனையுங்கையலம்பி
கூடையொருபக்கம்வைத்து குந்தினள்பூங்குறத்தி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கூவுவாள்ராசகன்னி
நீ-இருக்கின்றநாடும் எழிலானதேசமும்
மயிலனையேயுன்னுடைய மைந்தர்பெருமைகளும்
மைந்தர்பெருமையு மற்றப்பேர்சந்ததியும்
ஒன்றுமொளியாம லுத்தமியேகூறுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குயேதுசொல்வாள்

குறம்.

தெந்நாடுமலைநாடு யிருக்குமெந்தநாடு
தேசமடுஞ்சகலுங்கிரி யிருக்குமெந்தநாடு
கல்லடைந்தமலைநாடு காடுமெந்தநாடு
கைலங்கிரிநாதரங்கே காட்சிதருநாடு
சொல்வரியமலைநாடு சுகம்பெருகுநாடு
சோணாசலமீசரடி தேசமடிநாங்கள்
எத்திசையும்புகழ்படைத்து யிருக்குமெந்தநாடு
கழிவானமலைநாட்டில் குறத்திபடிநாங்கள்
குறத்திமெத்தக்குளிர்நாடும் குஞ்சரவநாட்டில்
கூசாமல்வாழுமெந்த தேசமடிநாங்கள்
முத்துமாலைத்திரைமாலை எங்களதுநாடு
மூவர்தமிழ்பாடுமலை எங்களதுநாடு
நீலமலைநிமலமலை எங்களதுநாடு
நித்தம்நித்தம்குறம்பாடி திரிவமடிநாங்கள்
பச்சைமலைபவளமலை எங்களிடநாடு
பரமசிவன்காணியுடன் வாதாடும்நாடு
கொச்சிமலைகுடகுமலை எங்களதுநாடு
குமரேசர் வள்ளியமை கைபிடித்தநாடு
குறச்சிநல்லகுச்சிநிக்கி தனதனவொய்யாரி
குமரேசர்வசந்தசக் குறியுரைக்குங்குறத்தி
வெள்ளெருக்கம்பூச்சூடி யிருந்தஅண்ணாமலையில்
வேணவசம்கொடுப்பவர்க்கும் குறியுரைக்குங்குறத்தி
உருக்கியபொன்கொடுத்தாலும் ஒன்றுமில்லையென்போம்
உண்ணாமுலையம்மனுக்குவுகந்தமுது படைப்போம்
வெள்ளிமலைத்திரைமலை எங்களதுநாடு
விக்கினர்க்கும்வேலவர்க்கும் குறியுரைக்குங்குறத்தி
கண்டத்திலேலேகறுப்புடைய கைலங்கிரிநாதர்
கர்த்தரிடதயவாலே குறியுரைக்கவந்தேன்

வேறு.

தேனூர்விளாடமம்மா தினமுஞ்செந்நெல்விளையும்
கல்லின்மேல்நெல்விளையுங்கதிர்வானமேலோங்கும்
கட்டுக்கலங்காணுங்கதிருழக்குநெற்காணும்
வாழைவடக்கிணும்வான்கமுகுதெற்கிணும்
சோலைகிழக்கிணுந்துப்பலாமேற்கிணும்

கோவும்புலியுமொருகுளத்திலேநீருண்ணும்
கீரியுமசற்பமொருகிண்ணியிலேப்பாலுண்ணும்
எலியும்பூனையுமொருபஞ்சாத்திலேவாழ்ந்திருக்கும்
தங்கமழைசொரிந்துதழைத்திருக்கு[illegible]மே
மாதமும்மாரிமழைகள்பொழிந்துவரும்
திங்கள்மும்மாரிபெய்யும்தேசஞ்செழித்திருக்கும்
என்றுமவருணாத்துயிருத்தாளொருபுறம்

பெருந்திருவாள்சொல்லுவது-வேறு.

அப்போபெருந்திருவாள் அருங்கிளியாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கிகொம்பனையுங்கூறலுற்றாள்
எந்தனதிசைமையெல்லாமுரைத்தாயேகட்டுவச்சி
(நீ) எந்தவூர்எந்ததேசமெனக்கறியக்கூறுமென்றாள்
அப்போமலைக்குறத்தி ஆரணங்குசொல்லலுற்றாள்
உந்தனதுகுலமுமுன்பேருஞ்சொல்லுமென்றாள்

குறம் - வேறு.

எங்கள்குலம்ராசகுலம் குறக்கூட்டமல்ல
ஈழிலானருடிசையிலேகுடியிருப்போமம்மை
ஐவருக்கும்பெண்டிருப்போம்நாங்களடியம்மை
அபிமானங்குலையாதசாதியடிநாங்கள்
பஞ்சவர்க்குப்பெண்டிருப்போம்நாங்களடியம்மே
பரிதாபங்குலையாதசாதியடிநாங்கள்
பெண்டிருந்ததேசமெல்லாம்பின்னையொன்றுமறியோம்
பெருநெருப்பைதின்டொருதசாதியடிநாங்கள்
மாலையிட்டநாள்முதலாய்மனதரிந்தாரில்லை
மடிநெருப்பைத்தின்டொருதசாதியடிநாங்கள்
கூறையிட்டநாள்முதலாய்க்குணமறிந்ததில்லை
கொடிநெருப்பைத்தின்டொருதசாதியடிநாங்கள்

வேறு.

பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்நாயகியும்
குறத்தியுரைகேட்டுக்கொம்பனையாளே[illegible]சொல்வாள்
வாடிமலைக்குறத்திவர்ணமலைக்கட்டுவச்சி[illegible]
மாலையிட்டாள்முதலாய்மனமறிந்ததில[illegible]ய்
கூறையிட்டாநாள்முதலாய்க்குணமறிந்[illegible]ம்
கையில்குழந்தையுவந்தவண்மெ[illegible]
மடியிற்குழந்தைவந்தவாறேதுசொ[illegible]
அப்போமலைக்குறத்தி அருங்கி[illegible]

குறம்.

ஆபன்றுளாலென்றவண்ணனடியம்மே
அரிவையர்க்கிசையருமகாகதியடியம்மே
உலகளந்தமாயனென்னண்ணனடியம்மே
உத்தமியாள்சீதைகபெங்கள்மாத்தியடியம்மே
உலகாளுமாகன்னியெனக்குசக்களத்தி
அவளைப்பெற்றசொக்கரெங்கள்சகப்பனடியம்மே
மாயவனேமைந்தன்வரம்வேண்டுமென்றுகேட்டால்
மகிழ்ந்துமெங்கள்ராமசலோமைந்தன்வரம்தருவார்
மாயவனைமனக்கணிலேதினம்நினைப்போம்நாங்கள்
மாயவரேகுழந்தையாகமடிமீதிலிருப்பார்
பிள்ளையில்லாதெங்களுக்குப்பிள்ளைவரம்தருவார்
பிள்ளைகலிதீர்க்கவந்தபெருமாளிவர்தாண்டி
மைந்தனில்லாஎங்களுக்குமைந்தன்வரமதருவார்
மைந்தன்கலிதீர்க்கவந்தமாயனிவர்தாண்டி
மந்திரத்தாலேந்துபிள்ளைஉண்டோடிஎனக்கு
மகதேவர்தந்தபிள்ளையீசாண்டியம்மே

வேறு.

குறத்தியுரைகேட்டுக்கொம்பனையாளேதுசொல்வாள்
(இந்த) மாதுஉரைகேட்டுமயிலனையாளேதுசொல்வாள்
மைந்தன்பெறும்வகைகள்மயிலனையேசொல்லிவிட்டாய்
குழந்தைபெறும்வகைகள்கொம்பனையேசொல்லிவிட்டாய்
எந்தெந்தலோகமெல்லாம்கண்டுவந்தாய்கட்டுவச்சி
பார்த்துவந்தலோகமெல்லாம்பகாடிபூங்குறத்தி
அந்தவுரைகேட்டுஅழகானகட்டுவச்சி
ஆனால்நல்சொல்லுகிறேன்அன்னமேபெண்மயிலே
பார்த்துவந்தலோகமெல்லாம்பைங்கொடியேசொல்லுகிறேன்கேள்

குறம் - வேறு.

பூலோகம்புவலோகம் [torn] தேனம்மே
புதுமையுள்ளசி [torn] வந்தேனம்மே
மேலானதெய்வ [torn] தேனம்மே

மேன்மையுள்ளவைகுந்தம் கண்டுவந்தேனம்மே
சீரானசந்த்ரலோகம பார்த்துவந்தேனம்மே
செகம்புகழுஞ்சூர்யலோகம் பார்த்துவந்தேனம்மே
மாலோகம்செனலோகம் பார்த்துவந்தேனம்மே
வரிசையுள்ளபிர்மலோகம் கண்டுவந்தேனம்மே
நேரானதாரதலங்கள் பார்த்துவந்தேனம்மே
நிட்சயமாய்க்குறிசொல்லும் குறத்திபடிநாங்கள்

வேறு.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்
பதினாலுலோகமெல்லாம் பார்த்துவந்தேனென்றுசொன்னாய்
அந்தந்தலோகமெல்லா மறிந்துவந்தேனென்றுசொன்னாய்
கண்டுவந்தலோகத்திலே கனந்தகுறிசொன்னதுவும்
(நீ) சொன்னகுறிக்குமெச்சி வச்சிதங்கள்தந்ததுவும்
வாங்கிவந்தபூஷணங்கள் மயிலணையேசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி அழகாகவேதுசொல்வாள்
ஆனால்கேள்பெண்ணரசே அதிசயங்கள்சொல்லுகிறேன்

குறம்- வேறு.

ஈசுரனாற்பெற்றெடுத்த விக்கினராமவற்கு
வயிர்கிழிந்துமுகம்வேறு ஆகுமென்றுசொன்னேன்
இந்திரற்கும்வானவற்கும் மயிலவர்க்குமல்லோ
இசைவாகநானுரைத்த குறிகள்மெத்தவுண்டு
ஈசுரற்கும்பிரமகத்தியிருக்குமென்றுசொன்னேன்
இன்னமொருபெண்டுனக்கு வருவாளென்றுசொன்னேன்
என்குறிக்குயீசுரனார் மெச்சியல்லோஅம்மே
இயலானமுத்துமாலை யீய்ந்தாரடியம்மே
விக்கினரும்வேலவரு மெந்தனுக்குயம்மே
வைடூரியக்குறக்கூடை தந்தாரடியாமே
இந்திரரும்வானவரும் மெச்சியல்லோஅம்மே
கல்லிழைந்தகணையாழி தந்தாரடியம்மே
விஷ்ணுவுக்கும்லட்சுமிக்கும் வேணகுறிசொன்னேன்
விதமாகஎன்னையவர் மெச்சிக்கொண்டழைத்து
பட்சமுடனெந்தனுக்கு லட்சுமியாள்தானும்
பாங்கானமார்பதக்கம் தந்தாரடியம்மே

வேறு

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திபுரைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்

குறம்பாடிபெற்றுவந்தாய் கோடானரத்தினங்கள்
உள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்றுவந்தாய்
பூங்குறத்தியெந்தனுக்குப் புகழ்ந்துகுறிசொன்னையானால்
(எந்தன்) மனதுகுறைகளெல்லாம் வகையாகச்சொன்னையானால்
உள்ளக்குறியுரைத்தா லுச்சிரங்கள்தாரனடி
கொம்பனையேயெந்தனுக்கு குறியுரைத்தபிற்பாடு
குறக்கூடைதானிறைய கொட்டுகிறேன்ரத்தினங்கள்
ஒன்பதுரத்தினங்க ளுத்தமியேதந்திடுவேன்
வச்சிரவைரியம் மாணிக்கம்தந்திடுவேன்
நீலபதக்கங்களும் நிறைந்தமுத்துத்தாழ்வடமும்
பச்சைபதக்கங்களும் பருத்தமுத்துத்தாழ்வடமும்
தாளிபதக்கங்களுஞ் சன்னல்பின்னல்தாழ்வடமும்
அத்தனையுநான்றருவே னுனகுறிசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மாதுமுகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள்
தாளிபதக்கம்வேண்டேன்சன்னல்பின்னல்நான்வேண்டேன்
பச்சைபதக்கம்வேண்டேன் பருத்தமுத்துநான்வேண்டேன்
மாணிக்கம்வேண்டேன் மகரகண்டிநான்வேண்டேன்
உத்தமியேயுன்தயவால் மெத்தவுண்டுஎங்களுக்கு
பாரளந்தநாதர் பெருமாள்தயவாலே
வெள்ளிமலைமேலே வேணதுண்டுஎங்களுக்கு
உன்கையிலேதானிருக்குங் கற்பூரசம்பாவும்
செங்நெல்கொடுத்தாயானால் சீரகஎந்தனுக்கு
அள்ளிக்கொடுத்தையானாலானந்தவாழ்மார்பி
வறுத்துகொறித்திடுவேன் வையகத்தில்வாழ்ந்திடுவேன்
செங்நெலதுகொடுத்தால் நல்லகுறியுரைப்பேன்
குறக்கூடைநெல்கொடுத்தால் குறியுரைப்பேனுந்தனுக்கு
அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
மெல்லியாள்சொற்கேட்டு நல்லதென்றுசம்மதித்தாள்
அழகுசம்பாநான்றருவே னுனகுறிசொல்லுமென்றாள்
நெல்லளந்துநான்றருவேன் நல்லகுறிசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி அதற்குமேசம்மதித்து
கொம்பனையாள்மாதருக்கு குறிசொல்லப்போனாள்காண்

குறம்.

சாணியதுதானெடுத்துசதிருடனேமெழுகி
சட்டமுடன்பிள்ளையாரைபிடித்துமங்கேவைத்தாள்

அருகுதும்பைகொன்றையது அவர்சிரசில்சாற்றி
அழகானகனிவகைகள்கொண்டுமங்கேவைத்து
கிழங்குடனேவாழைப்பழம் தேங்காயுமுடைத்து
கிண்ணியிலேபாலமிர்தம் கொண்டுவந்துபடைத்தார்
பச்சரிசிதேங்காயும் பயறுடனேபாலும்
இச்சையுடன்தான்படைத்து தீபதூபங்கொடுத்தார்
அருகுதும்பைகையெடுத்து அவர்சிரசிற்சாற்றி
சுத்திவந்துகைதொழுதுதெண்டனிடுமென்றாள்
சிந்தையிலேஉன்கைகள் நீநினைந்துஅம்மே
இந்தநல்லகணபதியை வந்துபணியென்றாள்
உங்கள்குலதெய்வங்களை யுகந்துநன்றாய்போற்றி
உன்வீட்டுபூவாடைகாரிகளைநினைத்து
சிந்தையிலேதியானம்பண்ணிவந்தமருமம்மே
திறமாகவுந்தனுக்குகுறியுரைப்பேனிப்போ
எந்தன்குலதெய்வங்களைநானினைந்துஅம்மே
இகழாமலுந்தனுக்குகுறியுரைப்பேனிப்போ
கெங்காபவானியம்மாள்காளிகாதேவி
அங்காளஅம்மன்சத்தி அனைவோரும்வாங்கள்
ஆகாயவாணிதுர்க்கைஐயனார்பிடாரி
அலைகடலில்வாழுகின்றகன்னிகளும்வாங்கள்
கைலாசவாசருமேகச்சாலைநாதா
காஞ்சியில்வாழேகாம்பரகாமாட்சிவாங்கள்
அண்ணாமலைநாதருமேஉண்ணாமுலைத்தாயும்
கொல்லாபுரியாளும்வந்துகுறக்கூடையமரும்
ஏழுகன்னிகளுமெல்லைபிடாரிகளும்
எல்லவரும்வந்திந்தகூடைதனிலமரும்
ஈசுரரும்பார்வதியுமிருவருமாய்நீங்கள்
இன்பமுள்ளகுறக்கூடைவந்தமரவேணும்
அச்சுதரும்லட்சுமியுமானந்தமாக
பட்சமுடன்குறக்கூடைதன்னில்வந்தமரும்
பிர்மாவுஞ்சரஸ்வதியும்புகழாகநீங்கள்
பெருமையுடன்குறக்கூடைவந்தமரவேணும்
தேவேந்திரரிந்த்ராணிசித்தர்கின்னராளும்
தெளிவானகுறக்கூடைதன்னிலமந்தமரும்
வள்ளிதெய்வானையம்மையிருவர்களுமொன்றாய்
வேலவரும்வந்துகுறக்கூடைதனிலமரும்
ஏழுமுனியிளையமுனிமன்னாருசாமி
இவர்களெல்லாமொன்றாககுறக்கூடையமரும்
பச்சமலைத்தாயாரும்பெரியபாளையத்தாளும்

பாவாடைராயனுமேவந்துமிகவமரும்
முப்பத்துமுக்கோடிதேவர்களுங்கூட
நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளுமேஒன்றாய்
அஷ்டதிக்குப்பாலகர்களுநவக்கிரகங்கள்கூட
அனைவோரும்வந்துமீந்தகூடைதனிலமரும்
அண்டாண்டதெய்வங்களைநினைத்துமந்தக்குறத்தி
அழகுபெருந்திருவாட்குயேதுகுறிசொல்வாள்
முந்திமுந்திவிநாயகனைதொழுதமடிநாங்கள்
முருகரிடபாதமலர்என்னாளுமறவோஞ்
சத்திவிநாயகனைத்தொழுவமடிநாங்கள்
சரஸ்வதியைஅனுதினமுஞ்சிந்தையினில்மறவோம்
ஆதிசிவன்மாயவனைப்பிர்மாவைத்தொழுவோம்
ஆகாசதேவருடனிந்திரனைமறவோம்

வே று.

அப்போமலைக்குறத்திஆரணங்குயேதுசொல்வாள்
தேவாதிதேவர்களைநினைத்துமேஅப்பொழுது
கொல்லாபுரத்தாளைநினைந்துகுறிசொல்லுகிறேன்
குறிசொல்வேன்வாடிய ; மாயென்றாளேபூங்குறத்தி
அப்போபெருந்திருவாளாரணங்குயேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கிகொம்பனையாளேதுசொல்வாள்
அப்படியேநல்லதென்று ஆரணங்குவந்தமர்ந்தாள்
குறக்கூடைமுன்பாகக்குத்தினாள்நாயகமும்
மலைக்குறத்திகட்டுவச்சிவகையாகவேதுசொல்வாள்

குறம்.

முறநிரம்பசென்னெல்கொண்டுமூன்றாகப்பகுந்து
உன்மனதிலெண்ணிகேட்டதெல்லாம்சொல்லுகிறேன்கேளும்
உன்பேர்பெருந்திருவாள்உடன்பிறந்தாள்சுபத்திரை
உன்கணவன்திரியோதிரன்உள்ளபடிதாண்டி
இலக்குணர்க்குப்பூணூல்கலியாணமென்றுசொல்லி
இவனையுமழைத்துவந்ததுண்டோடிதானீங்கள்
அவர்கள்வரும்வழிதனிலே வசிகளைநாட்டி
இவனையுங்கொல்லவென்றுஎண்ணியிருந்தீர்கள்
ஆதியென்றகோபாலகிருஷ்ணனிடதயவால்
அதுக்குந்தப்பிப்பிழைத்தார்களவர்களுமம்மே
மல்லர்களைவிட்டுமல்லோஎண்ணெய்களைத்தேய்த்து

மாளாதபஞ்சவரை கொல்லவென்றுநினைத்தீர்
ஏழுலகமாண்டதொரு எம்பெருமாள்தயவால்
எம்பெருமாளருளாலே ஐவர்களும்பிழைத்தார்
குளிக்குமந்தகுளந்தனிலே கூர்வசியைநாட்டி
கூசாமல்பாண்டவரை கொல்லத்துணிந்தீர்கள்
அன்றுமந்தசோர்தனிலே நஞ்சமதைக்கலந்து
உயிருள்ளபாண்டவரை கொல்லத்துணிந்தீர்கள்
அப்போதுபீமாசன் அவர்களுண்ணும்சோற்றை
அனைவருக்கும்ஆகாதென்றுதான்வாரிபொசித்தான்
வாரியுண்டசோற்றாலே மதிமயக்கமாகி
மன்னனவன்மெய்மறந்து வைகுந்தம்சேர்ந்தான்
அப்பொழுதுநால்வருமே அலண்டுபுரண்டழுது
ஆயனந்தமாயவரை மிகநோக்கித்தொழுதார்
அப்பொழுதுமாயவரும் ஐவர்களைக்காக்க
அத்திபுரம்வந்தாரோடிஜோகிவடிவாக
விஷகடிபாம்புகடி தீருகற்குமருந்து
வேணவிதமருந்தெடுத்து கூறிவந்தார்தெருவில்
கூறிவந்தசப்தமதை தருமராஜரறிந்து
கொப்பெனவேதம்பிதனையழையுமென்றுசொன்னார்
அப்போதுதம்பியவன்தானழைத்துவந்தான்
ஏனழைத்தீரென்றுசொல்லி ஜோகியவன்கேட்க
தம்பிதனைஎழுப்புமென்று தர்மர்சொன்னாரப்போ
எழுப்பிவிட்டாலெந்தனுக்கு கொடுப்பதென்னவென்றான்
எந்தனது ஆஸ்திகளை உந்தனுக்குத்தருவேன்
அப்போதுஜோகியவன் மருந்தெடுத்துவுரைத்து
ஆயரிடஅருளாலே பிழைக்கவொன்றுகொடுத்தான்
வைகுந்தம்போனவுயிர்வந்துவீமர்பிழைக்க
மந்திரங்கள்தந்திரங்கள் செய்தானடியம்மே
அவன்செய்தமந்திரத்தால் பிழைத்தானடிபீமன்
அலண்டுநித்திரைபோனவன்போல் புரண்டெழுந்தான்பீமன்
செத்திருந்தவீமனுமே பிழைத்தெழுந்தானென்று
திகிலெடுத்துமனங்கலங்கி துரியோதனழுதான்
மற்றுமொருவிதத்தாலே பஞ்சவரைக்கொல்ல
மனமகிழ்ந்துசகுனியுடன் ஆலோசனைசெய்து
படுக்கின்றபாய்தனிலே பாம்புகளைவிட்டு
பதைபதைக்கப்பாண்டவரைகொல்லத்துணிந்தீர்கள்
அதற்குந்தப்பிப்பிழைத்தார்கள்பாண்டவர்களம்மே
ஆயனார்மாயனிட உபாயமடியம்மே

வஞ்சனையால்சூதாடிப் பாண்டவரையப்போ
மாளாதவிலங்குகளை மாட்டிவைத்தாரம்மே
பஞ்சவரைவஞ்சனைகள் செய்ததுபோதாமல்
ஐவருக்குமுகந்தவொரு அபிஷேகபத்னி
ஆரணங்குதுரோபதையை சபைதனிலேயிழுத்தார்
பற்றியிவர்தானிழுத்து பாவைதுகிலுரிந்து
பண்ணுதபங்கமெல்லாம் பண்ணிவைத்தார்சபையில்
கட்டழகிதுரோபதையாள் மனங்கலங்கியப்போ
கர்த்தாவர்மாயவரை கைதொழுதுநின்றாள்
ஆயாவர்மாயவனார் அறிந்தாரிவள்துயரம்
அட்சயமாய்துகில்வளர ஆயர்வரமளித்தார்
பத்தினியாள்துரோபதைக்கு மாளாத்துகில்கள்
வளருதென்றுசபைதனிலே மெச்சிநின்றார்பெரியோர்
இப்படியாய்வஞ்சனைகள் செய்ததுண்டோஅம்மா
இன்னங்கொஞ்சமுண்டடிதான் சொல்லுகிறேன்கேளு
அவருடையபங்குகளை அடங்கலுமேபறித்து
அரண்மனையும்மண்டபமும் இடிக்களாயமுண்டோ
அவருடையதேவிகளை அம்பலத்தில்நிறுத்தி
அவளைமிகவாய்ப்பழுது சொன்னாடியம்மே
உத்தமியைகொண்டுவந்து உங்கள்சபைநிறுத்தி
உரியாததுகிலுரித்த துண்டடிதானீங்கள்
பத்தினியைக்கொண்டுவந்து பார்சபையில்நிறுத்தி
பாங்கழியப்பேசினது உன்புருஷனல்லோ
மாதுதனைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி
மனமழியப்பேசினது முண்டடிதானீங்கள்
அப்பொழுதுதுரோபதையாள் தன்மனதிலெண்ணி
அண்டாதசண்டாளரென்றுமிகநொந்து
திரியோதினன்முகம்பார்த்து தேவியவள்சொல்வாள்
தீராதபெருஞ்சபதம்இட்டாளந்தசபையில
மொய்குழலாள்துரோபதையும் மூன்றிரண்டுபேரும்
முடிமன்னர்சபைதனிலே இட்டார்பெருஞ்சபதம்
இட்டபெருஞ்சபதத்தால்திரியோதினன்நொந்து
தன்மனதில்தானடுங்கி தகைமையெடுத்துரைப்பான்
பனிரெண்டுவருஷமட்டும் வனவாசம்திரிந்து
பதிமூன்றும்வருஷமதில் மறைவாகவிருந்து
பதின்மூன்றுஞ்சென்றவுடன் பதினாலில்வந்து

பாரதத்தைதான்முடித்து பட்டமாளுமென்றான்
இத்தனைவஞ்சனைகள் செய்ததுண்டுநீங்கள்
அத்தனையும்பொறுத்து ஐவர்போனார்வனவாசம்

வேறு.

நீங்களிந்தஞாயமெல்லாம் செய்ததுண்டோவென்றுரைத்தாள்
அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்தியிறைகேட்டு கொம்மனையாளேதுசொல்வாள்
வஞ்சனைகள்செய்ததுண்டு மாயங்கள்மெத்தவுண்டு
பண்ணாதகோலமெல்லாம் பண்ணிவைத்தோமைவரையும்
வஞ்சனைகள்செய்ததுண்டு வனவாசம்போனதுண்டு
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
பதின்மூன்றுஞ்சென்றபின்பு பதினாலில்பஞ்சவர்கள்
பாரதம்வென்றுமவர் படையெடுக்கவருவாரோ
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவாரோ
வருவாரோவாராரோ மற்றொன்றுசொல்லடிநீ
என்புருஷன்தானே இவர்நாட்டையாளுவரோ
பாரதம்வென்று படைபொருதும்வேளையிலே
நாங்கள்செவிப்பதுவும்நாடுநகராளுவதும்
அவர்கள்செவிப்பதுவும் ஆராய்ந்துசொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி அரிவையருமேதுசொல்வாள்
நற்றிவந்ததெய்வமோதான் உற்றவரியுரைக்க
பஞ்சவர்கள்தன்மனதை பார்த்துமிருந்தேனே
கட்டழகர்தன்மனதை கண்டுமிருந்தேனே
சாதகமும்பொய்யாது தலைவிதியுந்தப்பாது
பிரமனெழுத்திதுதான் புரளாதொருநாளும்
கர்த்தரிடகட்டளைகள் கடவாதொருநாளும்
கொல்லாபுரத்தாளை எண்ணியேஇப்பொழுது
சூதன்கடத்தையெல்லாம் சொல்லுகிறேன்கேளடிநீ

குறம்.

கூடைதனிலமர்ந்திருக்கும் கொல்லாபுரத்தாளே
கொம்பனையாள்கேட்குங்குறி சொல்வரமருளும்
இன்னமிவள்கேட்குங்குறி எல்லாநான்சொல்ல
எந்தனுக்குவாக்கருளும்என்றுமிகத்தொழுது
பெருந்திருவாள்முகம்நோக்கிப் போனகுறத்தி
பெருமையுள்ளஐவரது சேதிகளைச்சொல்வாள்
தர்மமேஜெயமென்று போனார்வனவாசம்
தர்மங்களைநினைப்பவர்க்கு தாட்சியுண்டோசொல்லும்
ஐவர்களும்ஐந்துவுருகொண்டுமெல்லோவம்மே

அப்பானவிராடபுரம் சேர்ந்தாரேடியம்மே
இன்னமுந்தன்கணவன் படை சேனைகளைக்கூட்டி
இபளின உயுத்தியங்கள்நடக்குமடியம்மே
உயுத்தியங்கள்நடக்கையிலே ரத்தக்கடலோடும்
மெத்தெனவேநானுரைத்தேன்சத்தேநின்றுபாரும்

வேறு.

அப்போபெருந்திருவாள் அரிவையருமேதுசொல்வாள்
ஆனமலைக்குறத்தி அழகானகட்டுவச்சி
வர்னமலைக்கட்டுவச்சி வாக்குரைப்பாயெந்தனுக்கு
என்கணவன்ராச்சியத்தை யாண்டுமிருப்பானோ
அத்திபுரபட்டணத்தை யாள்வாரோஎன்புருஷன்
ஒருந்தாரயாள்வாரோ வுத்தமியேயெனபுருஷன்
பங்காளிபஞ்சவர்கள்பாதினுடாள்வாரோ
இன்னம்வருவாரோ எங்கள்தாயாதிகளும்
சுகமாபிழைத்துத் தரணியதியாள்வாரோ
செத்துமடியாமல் செகதலத்தையாளுவாரோ
சண்டைபண்ணிநாடுநகர் தாமேகெலிப்பாரோ
மறுபடியும்வருவாரோ மன்னரந்தபஞ்சவர்கள்
எனக்குத்தெரியச்சொல்லு மேந்திழைகட்டுவச்சி
அப்போதுமலைக்குறத்தி அழகாகவதுசொல்வாள்

குறம்.

பார்சபைகளில்விரித்த கூந்தலடியம்மே
படுகளத்தில்முடிப்பேனென்று போனாள் வனவாசம்
உங்கள்சபைதனில்விரித்த கூந்தலடியம்மே
உயுத்தியத்தில்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
தானொருத்தியல்லவோடி தலைவிரித்துநின்றேன்
இந்த உலகமெலாந்தலைவிரிக்கலாச்சுதென்றுபோனார்
வஞ்சனைகள்செய்ததொரு மன்னவரையெல்லாம்
இரணக்களத்தில்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
பத்தினியாள்விரித்ததொருகூந்தலது அம்மே
பார்லோகம்விருக்குமென்றுபோனாள்வனவாசம்
அருந்ததியாள்விரித்ததொருகூந்தலது அம்மே
(நாளை) அனைவர்களும்விரிப்பாரென்றுபோனாள்வனவாசம்
பதினெட்டாநாளையிலேபடைபொருதுச்சண்டை
பார்மன்னர்மார்பிலேமுடிப்பாள்தலைகூந்தல்
நாகக்கணைகைபிடித்துநாடாளும[illegible]ன்
(உன்) நாயகன்மார்மேலேறிமுடிப்பாள்தலைகூந்தல்

அவனுடையவுதிரத்திலேயள்ளித்தலைசீவி
அனையனிடமார்பெலும்பைச்சிப்பாகவருந்து
பக்கக்குடல்பதினாறும்பத்தினியாளெடுத்து
நாளை-படுகளத்தில்வாரிதலைமுடிப்பாளோடிகூந்தல்
நூற்றொருவர்பூமுடியைநொறுங்கடித்தபின்பு
வேற்றுமைகள்தொலைந்ததென்றுவாருவாள்பாஞ்சாலி
பங்காளிதலைகளெல்லாம்பற்றறுத்தபின்பு
பத்தினியாள்தலைமுடித்துப்பாராளவருவாள்
அன்றேடேமுடிபுடியைவரிடசபதம்
அரசாளவந்திடுவாராரணங்கேகேளும்
இந்தமட்டுஞ்சொன்னகுறிபிசகாதம்மை
ஈஸ்வரனாணையென்றுஇருந்தாளந்தக்குறத்தி
கூடைதனில்செங்கெலதுகொட்டலையோஅம்மே
கொம்பனையேயென்மனைக்குக்கொண்டுநானடப்பேன்
எட்டொருநாளாச்சுதடியித்தெருவேவந்து
என்கணவனிணைதேடியிங்கேவருவாண்டி
பத்தொருநாளாச்சுதடிவீட்டைவிட்டுவந்து
பத்தாவுமெனைத்தேடிவருவாரடிபெண்ணே

வேறு.

என்றுமவருரைக்கவதுசொல்வாள்பெருந்திருவாள்
குறத்திநீசொன்னதெல்லாங்கொற்றவர்க்கேற்றகாலம்
மாதேநீசொன்னதெல்லாம்மயிலனைக்கேந[...]லம்
எங்களுக்குற்றகுறியொன்றுசொல்லலையே
மன்னவருக்கற்றகுறிமயிலனையேசொல்லலையே
பஞ்சவருக்காகவுரைத்திரோபத்தினியே
காடாண்டபஞ்சவர்கள்நாடாண்டுவருவாரோ
ஐவரும்வந்துமல்லோஅரசாண்டிருப்பாரோ
நூலரில்கடுந்திரளார்நூற்றொருவரானவரும்
இருந்தரசையாளுவரோஎனக்குரையுங்கட்டுவச்சி
நிச்சயமானகுறிநீயுரையுங்கட்டுவச்சி
அந்தவுரைகேட்டுஅருங்கிளியாளேதுசொ[...]ர்
நான்சொன்னகுறிகளெல்லாஞ்செவிதன[...]யோ
பார்வதிக்குமீஸ்வரர்க்கும்பகுந்[...]
வேலவர்க்கும்வள்ளியர்க்கும்மே[...]ன்
இந்திரற்குந்தேவியர்க்குமிசைந்[...]
இராமருக்குஞ்சீதையர்க்குநல்[...]

பிர்மாசரஸ்வதிக்கும்வேண்டுங்குறியுரைத்தேன்
அந்தந்ததேவரெல்லாமடுத்துமெனைக்கேட்டதில்லை
இன்னமின்னஞ்சொல்லுமென்றுவந்திழையேகேட்கிறாய்
ஆனால்கேள்சொல்லுகிறேனணங்குநாயகமே

குறம்.

நாகக்கொடிதனைப்படைத்தநறுநுதலாய்சேளாய்
உன்-நாயனாருநவனைதசொல்கிறேன்கேளம்மே
நூலால்கடுந்திரளார்நூற்றொருவரம்மே
நுட்பமுடனரசாண்டுஅற்பமதில்வாழ்வார்
பத்துதிங்களுண்டடியேபாராளமன்னர்
பதினோராந்திங்களிலேபடைமுகத்துமாள்வார்
எட்டிரண்டுதிங்கள்மட்டும்இருந்தரசையாள்வார்
இனிபொருதிங்களிலேயிறந்திடுவார்முடிகள்
பத்தினியாள்சாபத்திலேபாரதப்போர்தன்னில்
பஞ்சவர்கள்கையாலேமாண்டிடுவாரம்மே.
அருங்கிளியாள்சாபத்தினல்லையர்களுமம்மே
ஐவரிடகையாலேமாண்டிடுவாரசொன்னேன்
படுகளத்தில்மாண்டபின்புகேளடிபெண்ணே
பஞ்சவர்களரசாள்வார்பார்முழுதுமல்லோ
அருங்கிளியாள்கூந்தல்தனை யங்ஙனவேமுடித்து
ஐவருடன்வாழ்ந்திருப்பாராரணங்கேகேளும்
என்றுமிந்தக்குறத்திசொல்லஇளங்கொடியாள்கேட்டு
இடிவிழுந்தாற்போல்முழுதுமேங்கியழுதாளே

வேறு.

பேடைமயி[illegible]ண்ணாள்பெருந்திருவாணுயகமும்
மார்பிலறை[illegible]கொண்டுமண்மேற்புரண்டழுதாள்
ஆர்கடகக்கை[illegible]லேயறைந்துகொண்டுதானழுதாள்
மோதிரக்கையைமுகத்திலறைந்துகொண்டாள்
பேடைமயில்கண்ணாள்பெருந்திருவாடானழவே
அங்குமொருதாதியறிவுடையாளோடிவந்து
கொப்புதிருத்தியல்[illegible]வைவகித்திருத்தி
வளையலதுதிருத்தி[illegible]க்திருத்தி
பூணாரோசகத்தைத[illegible]த்தி
ஆறிவிடுமென்று[illegible]துபோய்கடந்தாள்
கட்டார்கருங்குழ[illegible]னவந்து
செம்பொன்திரை[illegible]தெண்டனிட்டு
அம்பொன்திரை[illegible]னிட்டு

தெண்டனிட்டதாதிதிருப்பவெழுந்திருந்து
மோதிரமின்னமுடிமேலேகைதொழுது
காந்தாரிநாயகிக்குக்கன்னியருமேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்மாளிகையில்
குறத்தியங்கேவந்ததுவுங்குறிகளுரைத்ததுவும்
கானக்குறத்தியங்கேகைபார்த்ததுசொன்னதுவும்
ஐவர்பஞ்சபாண்டவர்களரசாளப்போகிறதும்
மன்னர்பஞ்சபாண்டவரும்வையகத்தையாளுவதும்
ஐவரந்தபஞ்சவர்களரசாட்சியாளுவதும்
காஞ்சிநாடாளுங்கர்னரிங்கேமாளுவதும்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்மாளுவதும்
பாஞ்சாலன்பெற்றகன்னிபத்தினியாள்துரோபதையும்
கொத்தார்குழலியவள்கூந்தல்முடிப்பதுவும்
அத்தனையுஞ்சொல்லியுரைத்தாளந்தகட்டுவச்சி
பேடைமயிற்கண்ணாட்பெருந்திருவாட்டான்கேட்டு
ஆனந்தமாரியழுதுபடுத்தாள்காண்
அந்தவிசேஷமறிக்கையிடவந்தேனென்றாள்
கட்டார்கருங்குழலிகாந்தாரிதான்கேட்டு
குறியுரைக்கவந்ததொருகொம்பனையாள்கட்டுவச்சி
குறிசொல்லிப்போனாளோகொடியிடையேசொல்லுமென்றாள்
அங்கேயிருக்காளோயாரணங்கேசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டுஅழகான தாதியர்கள்
பேடைமயிற்கண்ணாட்பெருந்திருவாண்மாளிகையில்
குறிகளுரைத்தேயிருக்கின்றாள்பைங்கொடியும்
அந்தவிசேஷமறிக்கையிடவந்தேனென்றாள்
குருடனிடதேவிகொம்பனையுந்தான்கேட்டு
அவளாங்காரக்கோபமுடன்அங்கேயெழுந்திருந்து
தாதிமுகம்நோக்கித்தையலுமேதுசொல்வாள்
தேசத்தையாளுந்துரியோதனருக்கு
சொல்லிநீவாடியென்றுமெல்லிநடக்கலுற்றாள்
அறிக்கையிட்டுவாருமென்றுஆரணங்குவாராளே
அரண்மனையேழுகட்டுமெந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதிதெருவும்பலதாண்டி
பேடைமயிற்கண்ணாட்பெருந்திருவாண்மாளிசென்று
மருமகளைத்தான்பார்த்துமகராசியேதுசொல்வாள்
என்காண்மருமகளேயிந்தவீதியுந்தனுக்கு
இவளார்காணும்கட்டுவச்சியடைவாயுரைத்தவள்தான்
எங்கிருந்திங்குவந்தாயிந்தக்குறியுரைக்க
என்றுமவளுரைக்கவதுசொல்வாள்கட்டுவச்சி

குறம்.

ஆதிசிவனடிருந்துவந்தேனடியம்மே
அத்திபுரங்குறியுரைக்கஅழகாகவந்தேன்
கொச்சிமலைகுடியிருக்கும்குறத்தியடிநாங்கள்
குமரேசர்வள்ளியர்க்குங்குறியுரைப்போம்நாங்கள்
பச்சைமலைகுடியிருக்கும்குறத்தியடிநாங்கள்
பரமசிவனுமையவட்குக்கைபார்க்குங்குறத்தி
மலையாளதேசந்தேடிமகிழ்ந்துகுறிசொன்னேன்
வளமானசெந்நெலெல்லாம்வாங்கிவந்தேனம்மே
அல்லியிடசிமையிலேஆனகுறஞ்சொன்னேன்
அல்லியவள்மனமகிழ்ந்துநெல்லுமள்ளியிட்டாள்
வம்பருக்குந்தும்பருக்கும்வாய்த்தகுறிசொன்னேன்
கம்பெனக்கள்ளியிட்டார்கட்டழகியம்மை
ஆராயிரம்பாண்டியர்க்கழகுகுறிசொன்னேன்
சீராணகேழ்வரகைத்திறமுடனேயளித்தார்
இந்நாட்டுக்குறியுரைக்கவிங்கேவந்தவிடத்தில்
எந்தனுக்குப்பெருந்திருவா ளென்னகொடுப்பாளோ

வேறு.

இப்படியாய்ச்சொல்லியிருக்கின்றாள்கட்டுவச்சி
கட்டார்குழலியருஞ்சாந்தாரிதான்கேட்டு
குறத்திமுகம்நோக்கிக்கொடியிடையுந்தான்கேட்டு
முன்னேயுரைத்தகுறிசொல்லுங்காண்மொய்குழலே
என்மருமகட்குச்சொன்னகுறிஎந்தனுக்குசசொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்திஅரிவையருமேதுசொல்வாள்
முறத்திலேசெந்நெல்கொண்டுவாருமேமொய்குழலே
செந்நெலதுபாப்பிச்செப்புவேன்குறியுனக்கு
அப்போதுகாந்த[illegible]யரிவையருமேதுசொல்வாள்
கொத்துச்[illegible]ச்சம்பாகுடமல்லிச்சம்பாவும்
கொண்டுவந்துபொன்முறத்தில்கொட்டினாள்குறத்திமுன்னே
அப்போதுகட்டுவச்சியரிவையருந்தான்பார்த்து

குறம்.

நெல்லையவள்கைப்பிடித்துநேர்ந்தகுறியென்பாள்
நிமலியிந்தஅரசியர்க்குநினைத்தகுறிசொல்வாள்
பொன்முறத்தைகைபிடித்துப்புதுமையிதென்பாள்
பொற்புடையபாஞ்சாலிபுதுமைகுறிசொல்வாள்

முக்கணணர்தன்மகனேமுன்னடக்கவேண்டும்
மூஷிகவாகனரேகுறியுரையுமையா
விகடசக்ரகணபதியேவாக்கருளவேண்டும்
வேலவரேவள்ளியரேவாக்கருளவேண்டும்
பச்சைமலைத்தாயாரேபாவைகுறியுரையும்
பரமசிவன்பார்வதியேபகர்ந்துகுறிசொல்லும்
அச்சுமலைகொச்சிமலைநடந்தகுறிசொல்லும்
நாராயணலட்சுமியேநாவில்வந்துவுரையும்
தெய்வங்களைநினைத்நாலேசிலிர்த்துக்கொள்ளுதுடம்பை
தேகமெல்லாம்நடுங்குதடிதேன்மொழியேகேளும்
குறக்கூடைகுலுங்குதடிகொம்பனையேஅம்மே
கோலவிழிதுடிக்குதடிகுறிகள்சொல்வேன்கேளு
முன்னடத்தகாரியங்களொன்றுரைப்பேன்அம்மே
முத்துமுடிப்பாண்டியர்கள்அரசாளும்நாளில்
பத்தாண்டுசென்றபின்புபாவையரேநீயும்
பார்மீதிலேவளர்ந்துசமைந்தாயடிபெண்ணே
உந்தனக்குகைபார்த்தசாஸ்திரியார்அம்மே
உனக்குசொன்னலட்சணங்களுண்மையென்றுசொல்வேன்
மண்டலத்தையாளுகின்றமன்னர்களானாலும்
மகதேவர்முதலானதேவர்களானாலும்
தெய்வபதியாளுகின்றதேவரானாலும்
தென்னிலங்கையாளுகின்றராட்சதரானாலும்
உன்னைத்தொட்டுமணம்புணர்ந்தாருடனேயவர்மாள்வார்
என்றுரைத்தார்வேதியர்கள்இச்சபையிலம்மே
என்குறிகள்பொய்யோடிஇன்னமுண்டுசொல்வேன்
அதுவறிந்துஉன்றகப்பன்ஆயாசப்பட்டு
அரசாண்டுயிருக்கையிலேஅங்கேயொருநாளில்
அருகிருந்தமந்திரிகள்ஆலோசனைசெய்து
அரசனிடமுகநோக்கிஅவர்களெடுத்துரைப்பார்
மன்னவனேநீர்கேளும்ஆலோசனையொன்று
மகளாரைமாலையிடமர்மம்சொல்லுகின்றோம்
பணயாலைபந்தலிட்டுமங்கையரைவைத்து
மன்னவரேயாட்டுக்கடாகொண்டுவந்துமல்லோ
ஆட்டுக்கடாகைதனிலேமங்கிலியந்தந்து
ஆரணங்குகழுத்துதனில்தரியுமென்றார்அப்போ
மங்கிலியந்தரித்ததொருஆட்டுக்கடாமாண்ட
மன்னர்வந்துமங்கையரைமாலையிடுவார்கள்
அந்தவுரைதான்கேட்டுவுன்தகப்பனம்மே

அப்படியேநல்லதென்றுஅவனுமசம்மதித்தான்
பதின்காதம்பந்தவிட்டுபாவேயனையுனக்கு
பாங்கானகடாக்கையில்தாலியதுதந்தார்
ஆட்டுக்கிடாவுன்கழுத்தில்தாலிகட்டியம்மே
ஆறுசுக்கலாப்வெடித்து அந்தக்கடாமாள
அதுசமையந்தான நிந்தஅந்தகனுஅம்மே
ஆணங்கைளந்தனுக்குஅருளுமென்றுகேட்டான்
அதுகேட்டுவுன்தகப்பன்நல்லதென்றுசொல்லி
சதூரானகலியாணம்தானுமங்கேமுடித்தான்
மண்டலத்தையாண்டுமல்லோயாண்டிருக்கும்நாளில்
மங்கையரோயுங்கனுக்குமைந்தனில்லையென்று
நன்மையுண்டுசெல்வமுண்டுஇராச்சியங்களுண்டு
நாடாளமைந்தரில்லையென்றிருந்தாயோடி
உன்புருஷனுடன்பிறந்தபாண்டுமகாராசன்
உண்மையுடனவர்மணந்தபத்தினியாள்குந்தி
குந்தியம்மாள்கற்பவதியாளுளென்றுநீயும்
கொள்ளாதவருத்தமுற்றுய்குமரியல்லோவம்மே
அடங்காதகோபமுடன்அங்கொருநாளம்மே
ஆற்றங்கரைஸ்நானம்பண்ணிஅருங்கிளியாள்வாராள்
மின்னல்மின்னிமழைபொழியும்வேளையதுஅம்மே
மெல்லியரேநீபோய்பலாமரத்தைச்சேர்ந்தாய்
அதிலிருநதரிஷியாரும்அணைந்தாரடிஅம்மே
அப்போதேசோபமதுவுண்டாச்சுதுனக்கு
நூற்றுவொருமாதமதுசென்றலவோபிள்ளை
நீபெறுவாயென்றுமேதான்ரிஷியுனக்குஉரைத்தார்
அந்தவுரைநீகேட்டுஅகமகிழ்ந்துவந்தாய்
அப்போதுன்னோரகத்தியைந்துபிள்ளைபெற்றாள்
ஓரகத்திபிள்ளைபெற்றாளென்றுசொல்லிநீயும்
உன்மனதுதாளாமல்வருத்தமுடனெழுந்து
எண்ணிவிசாரமுற்றுஇருக்குமந்தநாளில்
எந்திழையாள்பிள்ளைகளைபார்த்துமல்லோநீயும்
ஆங்காரக்கோபத்துடன்அறைந்துகொண்டுநீயும்
அடிவயிற்றிலிடித்துகொண்டு அடித்துகொண்டுஅழுதாய்
தொண்ணூறுதிங்களிலேகர்தாகையரேநீயும்
முன்னேயொருகுளவிதனைபிடித்திடித்துக்கொண்டாய்
அப்போதுபிண்டமதுகல[illegible]ங்கியல்லோஅம்மே
அழகானவுதிரமெல்[illegible]வெளியாச்சுதல்லோ
நூற்றொருகின்னி[illegible]ட்டமுடன்பிடித்து
நொறுங்காமல்உ[illegible]வழுக்கிவைத்தாய்பெண்ணே

ஆற்றுலொருதிங்கள்சென்றபிற்பாடுமைந்தர்
வேற்றுமைகளில்லாமல்வெளியானாலல்லோ
பொய்யோடிஎன்குறிகள்மெய்யேநீபுகலும்
பெருமையுள்ளஅந்தகனார்பனுநீதியாலே
என்றுமங்தயிளங்குறத்திதானுமங்கேநிற்க
இதுவறிந்துகாந்தாரிஎண்ணமிடுவதையும்

வேறு.

இப்படியாகயிவர்களிருக்கையிலே
திரியோதிரன்சபைக்குசென்றதொருதாதியர்கள்
தேசத்தையாளும்திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகேசென்றிறங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டதாதிதிரும்பஎழுந்திருந்து
சீர்கடகக்கையதனைசிரசின்மேல்தூக்கிநின்றாள்
மோதிரமின்னமுடிமேலேகைதொழுதார்
தேசத்தையாளும்திரியோதிரன்பார்த்து
நீ-யாரபெண்ணேதாதிஅறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்லஅடியேன்திருப்பணிதான்
பேர்பெற்றுடையபெருமானேயுன்பணிதான்
பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்தாதியென்றாள்
நீஇங்கேவந்ததெனக்கரியக்கூறுமென்றாள்
தாமக்கருங்குழலாள்தாதியருமேதுசொல்வாள்
அப்போதுதாதியரும்அழகாகவதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்வாசலிலே
கட்டுவச்சிவந்ததுவும்கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்சகாளுவதும்அரசமன்னர்ஆளுவதும்
பஞ்சவர்கள்ஆளுவதுபார்மன்னர்மாளுவதும்
பாஞ்சாலன்கன்னிதனைப்பற்றித்துகிலுரிந்ததுவும்
அத்தனையும்சொன்னாளேஅழகானகட்டுவச்சி
அந்தவுரைகேட்டுஅருங்கிளியும்மாமியுமாய்
நூலார்கடுந்திரளார்நூற்றொருவர்பெண்டுகளும்
அவர்-அங்கேதலைவிரித்துஅழுதுபுலப்புவதும்
தேசத்தையாளும்திரியோதிரன்கேட்டு
சிந்தைகலங்கித்திடுக்கிட்டுமெய்கலங்கி
ஒன்றுமொழியாமல்உத்தமனும்வீற்றிருந்தான்
பாட்டனார்வீஷ்மரும்பாராளுந்துரோணரும்

சிற்றப்பாவிதுரானுஞ்சீருள்ளகாங்கயனும்
காஞ்சிகாடாளுங்கருணருந்தானறிந்து
நூலார்கடுந்திரளும்நூறுபேர்தம்பிகளும்
கானக்குறத்தியனைக்கட்டுவோமென்றுசொல்லி
கால்விலங்குகைவிலங்குகழட்டாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்குமாளாப்பெருவிலங்கு
பெருவிலங்குபோட்டார்கள்சிறையிலடைக்கவென்று
கன்னியனைத்தான்பிடித்துகழுவிலிடுவோமென்று,
அல்லவரும்கூடிஅழகாகவாரார்கள்
அரண்மனையேழுகட்டுமந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதிதெருவும்பலதாண்டி
பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்மாளிசென்றார்
கானகுறத்தியனைக்கண்டுமந்தமன்னரெல்லாம்
நீ-ஆர்காணுங்கட்டுவச்சிஅரியவுரையுமென்றார்
எந்தவூர்வுங்களதுஎவ்விடமோசொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டுஅழகானகட்டுவச்சி
மானகரமாள்பவற்குமாதரவள்ஏதுசொல்வாள்

குறம்.

எந்தனதுதிருநாடுகேட்கிறையோதம்பி
ஏற்றவிடஞ்சொல்லுகிறேன்யாவர்களுங்கேளீர்
சந்திரர்கள்ஆளுவதும்எந்தனிடநாடு
இந்திரனார்ஆளுவதும்எந்தனிடநாடு
ஈரேழுபதினாலும்எங்களதுநாடு
ஈஸ்வரனார்ஆளுவதும்எந்தனதுநாடு
சொக்கரவர்ஆளுவதும்எந்தனதுநாடு
ஈஸ்வரியாள்ஆளுவதும்எந்தனதுநாடு
அண்ணாமலையாளுவதும்எந்தனதுநாடு
உண்ணாமுலையாளுவதும்எந்தனதுநாடு
கொலைகளவுயில்லாதார்ஆளுமெந்தநாடு
கோத்திரங்கள்சீர்தழைக்கும்எந்தனதுநாடு
பொய்யுரைப்பார்ஆளுவதும்எந்தனதுநாடு
புண்ணியனார்வாசம்செய்யும்எந்தனதுநாடு
முத்திரையமுத்தளக்கும்எந்தனதுநாடு
முன்னோர்கள்தவம்புரியும்எந்தனதுநாடு
கூடைதனில்கெம்பளக்கும்எந்தனதுநாடு
சொற்றவர்களாளுவதும்எந்தனதுநாடு

வான்முறைகள்தவறார்கள்எந்தனதுநாடு
வானவர்களாளுவதுமெந்தனதுநாடு

வேறு.

என்றுமவளுரைத்துநின்றாளேகட்டுவச்சி
நாட்டுவளப்பஞ்சொல்லிநாயகியாளங்கிருக்க
தேசத்தையாளுந்துரியோதனன்கேட்டு
ஆனால்கேள்கட்டுவச்சியடியேனொருவார்த்தை
கூடையில்முத்தளந்துகொட்டுவாரென்றுசொன்னாய்
முறத்திலேமுத்தளந்துமோருக்களிப்பேனென்றாய்
நீ—என்னகுறைவாகிவந்தீர்காணேந்திழையே
ஏதுகுறைவாகியித்தெருவேயிங்குவந்தாய்
அந்தவுரைகேட்டுஅழகானகட்டுவச்சி
மாநாகங்கொண்டவர்க்குமங்கையருமேதுசொல்வாள்

குறம்.

மழைகளில்லைசெந்நெலில்லைமண்டலங்கள்தோறும்
மகாராசனானவற்குவருத்தங்களுண்டாகி
நெந்நெலில்லைதூரவில்லைசீமையெங்குந்தம்பி
சிறப்பானவிளைவுமில்லைதேசங்கள்முழுவதும்
அத்திநகராசாள்வோராசர்களுண்டென்றார்
அதுகேட்டுசெந்நெல்பிச்சைவாங்கவந்தேனானும்
கொச்சைக்குறத்திகுறிகளிங்கேசொல்லி
குறம்பாடிசெந்நெல்பிச்சைவாங்கவந்தேனென்றாள்
சன்னசம்பாசின்னசம்பாசாதிமலைச்சம்பா
சதுரானகேழ்வரகும்வாங்கவந்தேனென்றாள்

வேறு.

அந்தவுரைகேட்டுஅரவக்கொடியோனும்
மாதுமுகநோக்கிமன்னவனுமேதுசொல்வான்
குறத்திமுகநோக்கிக்கொற்றவனுமேதுசொல்வான்
மாநகரமாளும்மகாராசன்பெண்டுகட்கு
பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்நாயகிக்கு
என்-ஆச்சியர்க்குச்சொன்னகுறியடியேனுக்குச்சொ[illegible]லுமென்றான்
யாவருக்குஞ்சொன்னகுறியெனக்குவுரையுமென்றா[illegible]

முன்னடந்தகாரியங்கள்மெல்லியரேநீயுரைத்து
இனிமேல்நடக்கும்வகையெனக்குச்சொல்லுமென்றான்
அந்தவுரைகேட்டுஅழகானகட்டுவச்சி
கூறுவாள்கொப்பனையும்கோதுகிளிபோலே
வாய்திறந்துதானுரைப்பாள்மாதுநல்லகட்டுவச்சி

குறம்.

நெல்விரையைத்தான்பாப்பிநேர்ந்தகுறியென்பாள்
நீலகண்டநிமலியரைவாக்கருளுமென்பாள்
காஞ்சிநகர்தனில்வாழும்காமாட்சியென்பாள்
காளையற்குக்குறியுரைக்கவாக்கருளுமென்பாள்
உச்சிதமாய்நெல்லெடுத்துஉண்ணுமுலையென்பாள்
உத்தமனார்குறியுரைக்கவாக்கருளுமென்பாள்
பச்சைவிரைகைபிடித்துப்பாவையருமப்போ
பச்சைமலைத்தாயாரைவாக்கருளுமென்பாள்
ஆபவருமலர்போலுமிங்ஙனவேவந்து
அரசனுக்குக்குறியுரைக்கஅருள்புரியுமென்பாள்
விக்கினரைவேலவரைவேண்டிமிகத்தொழுது
மெய்யானகுறியுரைப்பாள்மெல்லியருமங்கே
தேசமுழுதாளுகின்றதுரியோதனமன்னா
சிறப்பானகுறியுரைப்பேன்சிந்தைமகிழ்ந்தருளும்
அவனிமுழுதாளுகிறஅரசர்சிகாமணியே
ஆனகுறியானுரைப்பேன்அரனுருமறிய
முன்னடந்தகாரியங்களொன்றுரைப்பேன்கேளும்
மேன்மையுள்ளராச்சியங்களாண்டுவருநாளில்
நித்திலங்குபூமுடியார்நிறைந்திருக்குஞ்சபையில்
நினைத்துக்கொண்டாய்மைந்தனுக்குக்கலியாணஞ்செய்ய
மன்னர்களைத்தானழைத்துமருமங்களையுரைத்து
மகாராசர்சம்பந்தங்களைவேண்டுமென்றுநீயும்
பாராளந்தார்தன்மகளைக்கொள்ளவென்றுநீயும்
பலத்ததொருசபைதனிலேயெண்ணமிட்டாய்நீயும்
அதுவறிந்துவுன்தகப்பனாகாதென்றுசொல்ல
அருகிருந்தசகுனியவன்ஆகுமென்றேயுரைத்தான்
மண்டலத்தையாளுகின்றமன்னவரோநீயும்
மாயன்பதிமிக[illegible]ாக்கிவந்தீரல்லோஅன்று
ஆயரிடசபைத[illegible]லேயருகில்வந்துஇருந்து

துரோபதை குறம்.

அச்சுதரைப்பெண்கேட்கஅவருஞ்சம்மதித்து
கோபாலப்பெட்டிரொம்பக்கொட்டுமென்றார்பணத்தை
கொற்றவனுமதுக்கிசைந்துகொடுத்தாய்வெகுபணத்தை
கொட்டிவந்தபொன்னையெல்லாம்கோபாலரெடுத்து
கொப்பெனவேபதராக்கித்தூற்றிவிட்டார்காற்றில்
மறுபடியும்பொன்கொடுத்தால்பெண்கொடுப்பேனென்றார்
மன்னவனேநீமகிழ்ந்துமன்னர்களையனுப்பி
களஞ்சியத்துப்பொன்னையெல்லாம்கொண்டுவரச்சொல்லி
கரியமாலானவர்க்குக்கணக்குடனேஈந்தாய்
அதுவறிந்துசுந்தரியைத்தாரேனென்றுசொன்னார்
அடைவாய்முகூர்த்தமிட்டனுப்பிவைத்தாருன்னை
இன்றெட்டாநாளையிலேமுகூர்த்தமென்றுசொல்ல
எம்பெருமாள்தானுனைக்கவகிவந்தாய்நீயும்
அம்பலத்துச்சபையிலுள்ள யாவர்களும்நீயும்
ஐம்பத்தாறுதேசத்துமன்னர்களும்வந்தார்
இலக்குணற்குமணக்கோலம்நன்றாகச்செய்து
நாடாளும்ராசர்களும்நலமுடனேகூடி
மூன்றுநாளாகையிலேமுடிமன்னரெல்லாம்
முத்துமுடிராசாக்கள்பயணமிட்டுவந்தீர்
ஆயனிடபதிநோக்கியனைவர்களும்வந்து
அரிராமர்தன்கொலுவிலிருக்குமந்தவேளை
அர்ச்சுனரீன்றெடுத்தஅபிமன்னன்தானும்
அவனுடையதோழர்களுமங்ஙனவேவந்து
மணவறையில்வீற்றிருந்தஇலக்குணனையிழுத்து
மன்னர்சபைமுன்பாகமயிர்பிடித்துச்சிறைத்தார்
ஐந்துநல்லகுடுமிவிட்டு அவன்றலையைச்சிறைத்து
அரசாணிக்காலுடனேயிலக்குணனைக்கட்டி
மாயவனைப்பிடித்திழுத்துமரத்தோடேகட்டி
மன்னவனேயுங்களைத்தான்மண்டைநொறுங்கடித்து
மாயன்மகள்சுந்தரிக்குமணமாலைசூட்டி
மறுபடியுந்தன்பதிக்குமன்னவன்வந்துசேர்ந்தான்
அபிமன்னன்போனபின்புஅரசர்களேநீங்கள்
ஆயன்பதிவிட்டெழுந்துஅபிமானங்குலைந்து
வாளபிமன்செய்ததினால்மானபங்கமாகி
மரியாதைதாழ்வாகிமண்டலத்தேவந்தீர்
பொய்யோதானென்குறிசொல்மெய்யோநீபுகலும்

பூமிமுழுதாளுகின்றபுண்ணியனேயென்றாள்
முன்னடந்தகாரியங்களின்னமுண்டுசொன்னால்
முடியாதுபொழுதுமில்லைமன்னவரேகேளும்
முன்னடக்குங்காரியங்கள்எடுத்துரைப்பேன்கேளும்
ஈரேழுலகளித்தஈஸ்வரனாறிய
பஞ்சவரைக்கொண்டுவந்துபாரசபைநிறுத்தி
பங்கப்படுத்தியல்லோபார்விலங்கைப்போட்டீர்
ஐவர்களைச்சூதாடிஅறைதனிலேயடைத்து
ஆரணங்கைக்கொண்டுவந்துஅம்பலத்தில்நிறுத்தி
ஐவரிடதேவிதன்னைஅம்பலத்தில்நிறுத்தி
அனைவோருந்தாமறியஆடையுரிந்தீர்கள்
பத்தினியாள்மனதறியபாரசபைதனிலே
பரமசிவன்பார்வதியைசாட்சிவைத்தாளங்கே
மாதுநல்லாள்மனதறியமன்னர்சபைதனிலே
மாயவனைச்சீதையைச்சாட்சிவைத்தாளங்கே
பொற்கொடியாள்மனமறியபோர்மன்னன்சபையில்
பிர்மாவைச்சரஸ்வதியைச்சாட்சிவைத்தாளங்கே
வேல்புருவக்கண்ணாளும்விரிந்ததலையுடனே
மீளாதசாபமிட்டுப்போனாள்வனவாசம்
மன்னாவுன்பூமுடியைமண்ணில்விழத்தரித்து
மயிர்முடிப்பேனென்றுசொல்லிப்போனாள்வனவாசம்
கொற்றவனேயுன்னுடையகுடல்தன்னையெடுத்து
கொண்டையதுமுடிப்பேனென்றுபோனாள்வனவாசம்
மன்னவனேயுன்னுதிரமெண்ணெயென்றுதடவி
மயிர்க்கூந்தல்முடிப்பேனென்றுபோனாள்வனவாசம்
பனிரண்டுமோராண்டுசென்றவுடன்மன்னர்
பாரதப்போர்முடிக்கையிலேபஞ்சவர்களைவர்
ஆயனொருசாரதியாய்அர்ச்சுனன்தேரேறி
அரசுமன்னர்பூமுடியைஅடங்கலுமேதறித்து
நூற்றொருவர்பூமுடியைநொறுங்கடித்தபின்பு
நொடிப்பொழுதிலுன்முடியைத்தரையில்விழவடித்து
வீமனதுதெ[illegible]லேநீமடிந்தபிறகு
விபரீதப்பார[illegible]ர்முடிந்ததென்றுசொன்னார்
பாஞ்சாலனெனக்க[illegible]தில்வந்துதித்தகன்னி
பகைமுடிந்ததென்றுசொல்லிமார்மேவில்வறி
படுகளங்கள்முழுமையுந்தான்பாஞ்சாலியறிந்து

பாவையருந்தன்கூந்தல்வாரிமுடிப்பாளே
கூந்தல்முடித்தானபின்புகொற்றவர்களைவர்
கோடானயாகஞ்செய்துகுவலயத்தையாள்வார்
கருணனிடமைந்தனவன்காளைவிஸ்வகேது
கனத்தநல்லமுடிசூட்டிஅத்திபுரமாள்வான்
அங்கவளநாடனைத்தும்அவனுளப்போரான்
அவனியெல்லாம்பஞ்சவர்களாண்டுமிருப்பார்கள்
மன்னரிந்தபட்டணத்தையரசாளப்போரார்
மாறுதபெருநாகம்நீங்களுமேயாள்வீர்
ஐவரந்தபஞ்சவர்கள்அரசாண்டுவாழ்வார்
அழியாதபெருநாகம்நீங்களுமேயாள்வீர்
என்றுமிநதக்கட்டுவச்சிஎடுத்துரைத்தாளங்கே
இதுகேட்டுதிரியோதிரன்வங்கிமுகம்வாடி

வேறு.

குறத்தியுரைகேட்டுகொற்றவனும்வேறுபட்டு
கட்டுவச்சித்தானுரைக்ககாளையதுகேட்டு
அவன்-சிந்தைமனமகிழ்ந்துதிடுக்கிட்டுமெய்மறந்து
மற்றுமொருநினைவாய்மன்னவனும்கோபமதாய்
கானக்குறத்தியல்லகட்டுவச்சிதானுமல்ல
பஞ்சவரைமாலையிட்டபாஞ்சாலிஎன்றறிந்து
ஐவரையுமாலையிட்டஅருங்கிளியாளென்றறிந்து
அங்குள்ளசேவகரைஆணழகன்தானழைத்து
தூதுவரைத்தானழைத்துதொழுவிலங்குபோடுமென்ருன்
கால்விலங்குகைவிலங்குகழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்குதூக்காப்பெருவிலங்கு
தூக்காவிலங்குமிட்டுத்தொழுவிலேபோடுமென்ருன்
ஆரணங்குகுறத்தியரைஅடையும்கிடங்கிலென்ருன்
அப்போதுதூதுவர்கள்அங்ஙனவேஅதுசெய்தார்
கட்டழகிமாதினுக்குகழட்டாவிலங்குமிட்டு
ஆரணங்குமாதரையும்அறையிலேதள்ளிவந்து
சேர்விலங்குபூட்டிபல்லோசிறையிலடையுமென்று
மாளாவிலங்குமிட்டுமங்கையரைத்தானடைத்தார்
இப்படியாகயிவள்இங்கேயிருக்கையிலே
தோராவடிவழகிதுரோபதையுமேதுசெய்தாள்
மாயவரைத்தானினைந்துமங்கைபுலம்புகின்ருள்

கோவிந்தாவைகுந்தாகோபாலவாருமென்ருள்
அம்பலத்துவாசலிலேஅன்றுவந்துகாத்தீரோ
அப்போதுகாத்ததுபோல்இப்போதுகாருமையா
மன்னர்சபைநடுவேமானமதுகாத்தீரோ
மானகங்கொண்டவன்றன்மனையில்வந்துகாருமையா
ஆரணங்குஎந்தனையும்ஐவரிடஞ்சேருமையா
பாஞ்சாலிஎந்தனையும்பஞ்சவரிடஞ்சேருமையா
ஆனையைக்காத்ததுபோலடியாளைக்காருமையா
மைந்தனைக்காத்ததுபோல்ஆரணங்கைக்காருமையா
என்றுபுலம்பியிருக்கிருள்துரோபதையும்
அந்தசமையம்அதுவறிந்துஎம்பெருமாள்
மாயன்பெருமாள்மனதில்நினைவாகி
தேசத்தையாளுந்திரியோதிரன்மாளிகையில்
மானகங்கொண்டமகாராசன்வாசலிலே
ஐவரிடதேவிஆரணங்குதுரோபதையாள்
குறமாதனைப்போலகொம்பனையாள்வேஷங்கொண்டு
கட்டுவச்சிப்போலாககன்னிவடிவெடுத்து
சகாதேவராசனைத்தகுந்தக்குழந்தையாக்கி
மைத்துனனவனைமைந்தருருவாக்கி
ஐவரிடதேவிஅபிஷேகபத்தினியாள்
குறத்திவடிவாகிகொம்பனையாள்வந்ததுவும்
கட்டுவச்சிபோலாகக்கன்னியங்கேவந்ததுவும்
பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்நாயகிக்கு
கைபார்த்துக்கட்டுவச்சிக்கனத்தகுறிசொன்னதுவும்
முன்னடந்தகாரியங்கள்முழுதும்உரைத்ததுவும்
இனிநடக்கும்காரியங்கள்யாவுமுரைத்ததுவும்
பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்தானறிந்து
அழுதுபுலம்புவதும்அத்தையர்க்குச்சொன்னதுவும்
மண்டையுடைத்தழுதுமாமியர்க்குச்சொன்னதுவும்
மாமியதுவறிந்துமாளிகைக்குவந்ததுவும்
குறத்தியவள்வாய்மொழியைக்கொம்பனையாள்கேட்டதுவும்
மயிலனையாள்தன்வார்த்தைமாமியவள்கேட்டதுவும்
மைந்தருக்குச்சொல்லிஅனுப்பினதுமங்கனவே
மானகங்கொண்டமகனுக்குரைத்ததுவும்
நாகக்கொடிபடைத்தராசனறிந்ததுவும்
குறத்தியருகில்வந்துகுறியுரைக்கச்சொன்னதுவும்
இடும்பந்திரீயெனக்குஇசைந்தகுறிசொன்னதுவும்

பாவிதுரியனுக்கும்பாவைகுறம்சொன்னதுவும்
கேட்டுயிடிவிழுந்துகீர்த்திபில்லாமன்னவனும்
அரும்பாவிசண்டாளன்ஆலோசனைகள்செய்து
பஞ்சவர்கள்தேவியென்றுபாவியறிந்துகொண்டு
ஐவரிடதேவியென்றுஅரும்பாவிதானறிந்து
பாஞ்சாலன்கன்னியற்குபாரவிலங்கிட்டதுவும்
அருங்கிளியாள்துரோபதையைஅறையிலடைத்ததுவும்
அத்தனையுந் தாமறிந்துஆயபொழுந்திருந்து
வகைமோசம்வந்துதென்றுகரியமாலதானெழுந்து
துவாரகையைவிட்டுமல்லோசுவாமியங்கேவாராரே
வேர்க்கவிரிவிரிக்கவிராடபுறத்தில்வந்து
ஆருமறியாமல்அங்கொருவர்காணமல்
எவருமறியாமல்இனியொருவர்காணமல்
இருவருக்குப்பின்பிறந்தஇளவிசையன்முன்னேவந்து
அருச்சுனனூர்முன்னேவந்துஆயருமேதுசொல்வார்
வாள்விசையன்முன்னேவந்துமலைராமர்வதுசொல்வார்
அருச்சுனராசாவேஅனர்த்தம்வந்துநேர்ந்ததுகாண்
வாள்விசையாமன்னவனேமதிமோசம்வந்ததுகாண்
பாஞ்சாலன்பெற்றபெண்ணைபாவிசிறைவைததான்காண்
கொற்றூர்குழலியாளைகொடியசிறையில்வைத்தான்
கால்விலங்குகைவிலங்குஇட்டும்சிறையில்வைத்தான்
காவலுள்ளதுரோபதையைக்கடுகவழைக்கவேண்டும்
மயிலனையாள்துரோபதையைமாளிக்கழைக்கவேண்டும்
நீர்–கொற்றவனூர்வீரியரேகுறவனைப்போல்வாருமென்றூர்
அப்போதுவாள்விசையன்அரிராமர்தந்தயவால்
கொற்றவனூர்வீரியரும்குறவேஷமானூரே
அணிப்பிள்ளைகீரிகுத்தும்ஆண்மைக்குறவனூர்
காடிபுலிகள்குத்தும்கன்னக்குறவனூர்
தட்டிவரிந்துகட்டிசல்லடமும்மேற்பூண்டு
வில்லம்புகையிலெடுத்துவேந்தன்முதுகணிந்து
கருவேப்பிலைப்பையெடுத்துக்கடுகெனவேதோளிலிட்டு
சுருண்டக்காய்வற்றலதுசுக்கன்வற்றல்தானெடுத்து
காட்டுக்கிளாக்காயும்கடுகென்வேகைபிடித்து
குறவனைப்போலாகவாரானேகொற்றவனும்
கன்னக்குறவனைப்போல்வாரானேகாளையவன்
காடுசெடிதாண்டிகரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டிஅதிகவனந்தான்தாண்டி

துரோபதை குறம்.

அத்திப்புரஞ்சேர்ந்தான் ஆணுலழகுமன்னன்
இராசமன்னர்வீதியிலேநடந்துவாரான்வாள்விசயன்
சிங்கியைக்காணாமல்தேர்விசயன்தேடிவாரான்
குறத்திதனைக்காணாமல்குறவனவன்தேடிவாரான்
அத்திப்புரம்வீதியிலேஆணழகன்ஏதுசொல்வான்
சுருண்டைக்காய்கொள்வீரோசுக்கன்காய்கொள்வீரோ
காட்டுகிளாக்காய்கள்கன்னியரேவேண்டுமோ
கிலுகிலுப்பைகொள்வீரோகன்றுதும்பைகொள்வாருண்டா
கொற்றவர்கள்வீதியிலேகுறத்திதனைக்கண்டதுண்டோ
மன்னர்கள்வீதியிலேமங்கையளைக்கண்டதுண்டோ
மைந்தனும்மாதருமாய்மாளிவிட்டுவந்தார்கள்
எட்டுநாளாச்சுதையாஇளங்குறத்திவீடுவிட்டு
கைலாயம்குறியுரைத்துகடுகெனவேவீடுவந்தாள்
பிர்மலோகம்குறியுரைத்துபெண்ணழகிவீடுவந்தாள்
வைகுந்தம்போயிருந்துவடிவழகிவீடுவந்தாள்
எமலோகம்போயிருந்துஇளங்கொடியாள்வீடுவந்தாள்
நாகலோகம்போயிருந்துநாயகியாள்வீடுவந்தாள்
அன்பத்தாறுதேசமும்அவளறியாநாடுமில்லை
அவள்—எங்கெங்கேசென்றாலும்இளங்கொடியாள்வந்திடுவாள்
எட்டொருநாளாச்சுதல்லோஎன்மனையாள்வீடுவிட்டு
பத்தொருநாளாச்சுதல்லோபத்தினியாள்வீடுவிட்டு
ஏச்சுக்குஏச்சல்லோஎன்குலத்தார்தாமறிந்தால்
ஓரகத்திமச்சினமார்வுதாசினங்கள்சொல்லிடுவார்
மாமியார்தானறிந்தால்மட்டுமருங்குவையார்
மாசில்லாவம்மிசத்தில்மறுவுபடநாளாச்சு
ஆரணங்குதன்னாலேஅழும்புவாநாளாச்சு
அழகுள்ளகன்னியென்றுஅடைக்கிவசங்கொண்டார்கள்
வடிவுள்ளகன்னியென்றுவையகத்தார்கொண்டுசென்றார்
மாயப்பொடிமருந்தைமயிலனைக்குப்போட்டார்கள்
சொக்குப்பொடிமருந்தைசுந்தரிக்குபோட்டார்களோ
மந்திரத்தால்தந்திரத்தால்மாதையழைத்தார்களோ
ஆண்மைவலிமையினால்அடக்கிவசம்கொண்டார்களோ
என்றுசொல்லியிக்குறவன்இங்கேயழுதுவாரான்
நூலால்கடுந்திரளார்நூற்றொருவர்வீதியெல்லாம்
கன்னியரைத்தேடியல்லோகானையழுதுவாரான்

பேடைமயிற்கண்ணாள்பெருந்திருவாள்வீதியிலே
காட்டுக்குறவனவன்கத்திப்புலம்புகிறான்
குறத்தியைக்காணாமல்கூவியழுகிறானே
வாடிப்புலம்புவதும்மட்டுமிதங்களில்லை
சொல்லிப்புலம்புவதும்செவிகேட்கமுடியவில்லை
அங்கிருக்கும்தாதியர்களணியிழைமார்ஓடிவந்து
ஆர்காணும்நீகுறவா அழுதுபுலம்புவதேன்
எவர்காணும்நீகுறவா இங்கேபுலம்புவதேன்
அழுதவயணமதைஆரணங்குசொல்லுமென்றாள்
புலம்பும்வகையேதுபுண்ணியனேசொல்லுமென்றாள்
அப்போதுகுறவனவன் அழகாகவதுசொல்வான்

குறம்.

கன்னியெங்கள்கட்டுவச்சிகாளைகுறமுரைக்க
கண்டுவந்துவீதிகளில்குறமுரைக்கவந்தாள்
மாலையிட்டநாள்முதலாய்எனைப்பிரிந்ததில்லை
மாதுநல்லாள்வீடுவந்துவாரமொன்றுமாச்சே
கூரையிட்டநாள்முதலாய்க்கொற்றவனைப்பிரியாள்
கொம்பனையாள்வீடுவந்துவாரமொன்றதாச்சே
எழுதொருநாளச்சுதம்மாஎன்வீடுவந்து
இளங்கொடியாளிருப்பிடந்தான்எங்கேநானறியேன்
பத்தொருநாளாச்சுதம்மாபாவைமனைவந்து
என்-பத்தினியாளிருக்குமிடம்பாவையுநானறியேன்
கன்னியரைக்கண்டாலேகடுகனவேயழைத்து
கலிராமர்தன்னருளால்கடுகிமனைபோவேன்
உத்தமியைக்கண்டாலேயுடனேநானழைத்து
உம்பர்பிரான்தன்னருளால்வீடுபோய்சேர்வேன்
கன்னியரைத்தேடுவதுகலிராமரறிந்தால்
கனமோசம்வந்திடுமேஎங்கள்குலந்தனக்கு
பத்தினியைத்தேடுவதுபரமசிவனறிந்தால்
வழிபாவம்நேர்ந்திடுமேஎங்கள்குலந்தனக்கு
மெல்லியரைத்தேடுவதுவள்ளிவேலரறிந்தால்
வெகுமோசம்வந்திடுமேஎங்கள்குலந்தனக்கு
கொம்பனையாள்வீடுவரவில்லையென்றேயுரைத்த
குடிப்பழுதுவந்திடுமேகுறக்கூட்டந்தனக்கு

எச்சானசாதியல்லஎங்கள்குறச்சாதி
ஏழானசாதியற்கும்கீழ்ச்சாதிகாங்கள்
கபக்காய்தின்போம்கழுகுதின்போம்கட்டோணன்சுடுவோம்
கன்னியரைவிலைக்குவிற்றுஅமுதுபொசியோமே
மானைக்குத்திவிருந்திடுவோம்மாயகுறச்சாதி
மனையாட்டிதன்னைவிற்றுஅமுதுபொசியோமே
ஏனம்தின்போம்மிருகம்தின்போம்எங்கள்குறச்சாதி
ஏந்திழையைசோரம்விட்டுஅமுதுபொசியோமே
பாசப்புலிமிருகம்குத்திப்பலத்தவிருந்திடுவோம்
பத்தினியைவிலைக்குவிற்றுஅன்னம்பொசியோமே
எந்தனிடகுறத்திதனையாரழைத்தாரோடா
இழுத்தவனைக்கண்டாலேயிருதுண்டாய்ப்பிளப்பேன்
கன்னிதனைதொட்டிழுத்தகாளைதனைக்கண்டால்
கண்டதுண்டமாய்தரித்துகனத்தவுயிர்வதைப்பேன்
அரண்மனையும்அஸ்தானம்அடங்கலும்நானிடித்து
அவனுடையதேவிகளைஅழைத்திடுவேன்பெண்டாய்
கோபுரமும்கோயில்களும்கொத்தளமுமிடித்து
கொற்றவனார்தேவிதனைக்கூடியணைந்திடுவேன்.
கண்டேனேயாமாகில்கண்டதுண்டஞ்செய்வேன்
கன்னியரைஅழைத்துக்கொண்டுகடுகிமனைபோவேன்

வேறு.

என்றுமவனுரைக்கஇளங்கொடிமார்தான்கேட்டு
கால்நடுங்கிகைநடுங்கிகடுகெனவேயோடிவந்து
மாநகரமாளும்மகாராசன்தேவியற்கு
தெண்டனிட்டுத்தாதியர்கள்சீக்கிரமாவதுசொல்வார்
வணங்கிநமஸ்கரித்துமாதருக்குவதுசொல்வார்
ஆச்சிநீர்கேளும்அடியேன்ஒருவார்த்தை
மயிலனையேயுன்னுடையவாசற்படிகாத்திருந்தேன்
தேனின்குழலாளேதெருவாசல்காத்திருந்தேன்
அங்கேயொருகுறவன்அழுதுபுலம்பிவந்தான்
கட்டுவச்சிதன்னைத்தேடிகன்னக்குறவன்வந்தான்
ஆரணங்கைக்காணமல்அழுதுபுலம்பிவந்தான்
மயிலனையைக்காணமல்மன்னன்புலம்பிவந்தான்
அழுதகுரல்கேட்டுஆணழகாவென்னவென்றோம்
மன்னுஅழுதவகைவாய்திறந்துசொல்லுமென்றோம்

அந்தக்குறவன்தானுரைத்தவார்த்தையதைக்கேளுமென்றார்
மலைக்குறவன்தானுரைத்தவார்த்தையதைக்கேளுமென்றார்
கட்டுவச்சிநாயகியைக்கைதொட்டுவிழுத்தவனை
குறத்தியைத்தானிழுத்துகுகையிலடைத்தவனை
கண்டேனேயாமானால்கண்டதுண்டஞ்செய்வேனென்றான்
பார்த்தேனேயாமானால்பழுதுவருமென்றுரைத்தான்
அத்திபுரத்தையெல்லாம்அடியோடிடிப்பேனென்றான்
மகாராசன்பட்டணத்தைமண்ணோடேசாய்ப்பேனென்றான்
ஆமணக்கும்பருத்திவிரைஅங்கேவிதைப்பேனென்றான்
தங்கமதில்கோபுரத்தைதரையோடேசாய்ப்பேனென்றான்
ஆண்சிறையும்பெண்சிறையும்அவனைப்பிடிப்பேனென்றான்
ஆணாப்பிறந்தவரைஅடப்பம்பிடிக்கவைப்பேன்
மன்னர்களானாலும்மண்டைப்பிளந்திடுவேன்
தேவர்களானாலும்சிதரடிப்பேன்என்றுரைத்தாள்
அந்தவுரைகேட்டுஆச்சியரோசொல்லவந்தோம்
குறவனுரைத்ததெல்லாம்கொம்பனையேகூறவந்தோம்
என்றுமிகவுரைக்கவதுசொல்வாள்பெருந்திருவாள்
மாநகரமாளும்மகாராசனானவற்கு
நீங்களுரையுமென்றார்நித்திலங்கும்பூமுடியார்
அந்தவுரைகேட்டுஅலங்காரத்தாதியர்கள்
அரண்மனையேழுகட்டும்அந்தப்புரந்தாண்டி
தெத்துத்தெருதாண்டிதேரோடும்வீதிவிட்டு
மாளிகைகடந்துமன்னரிடவீதிவிட்டு
தேசத்தையாளுந்திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகேசென்றருகேதெண்டனிட்டாள்
நீயார்பெண்ணேதாதிஅறியவுரையுமென்றார்
ஆர்பணியுமல்லஅடியேன்திருப்பணிதான்
நீயிங்கேவந்ததெனக்கரியக்கூறுமென்றார்
தாதியவள்கைதொழுதுதானங்கேவதுசொல்வாள்
கால்விலங்குகைவிலங்குகழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்குதூக்காப்பெருவிலங்கு
விலங்கிட்டுமூலையடைத்தீரேமெல்லியனை
கட்டுவச்சிதன்னையல்லோகாவலிலேவைத்தீரோ
மலைக்குறத்தியானவளைவன்காவல்வைத்தீரோ
கட்டுவச்சிநாயகனார்கன்னக்குறவனவன்
பத்தினியைத்தேடியல்லோபார்மன்னன்வீதிவந்தான்

பூங்குறத்திதன்கணவன்வந்தான்குறவனவன்
கன்னியரைத்தொட்டிழுத்துக்காவலிலேவைத்தவரை
பத்தினியைத்தொட்டிழுத்துப் பாரசிறைவைத்தவரை
கண்டேனேயாமானால்கண்டதுண்டஞ்செய்வேனென்றான்
பார்த்தேனேயாமானால்பத்தியிழுப்பேனென்றான்
இந்திரனேயானாலுமினிவிடமாட்டேனென்றான்
சந்திரனேயானாலும்சற்றும்விடேனென்றான்
தேவர்களானாலும்சிதறடிப்பேன்என்றுசொன்னான்
அந்தவுரைகேட்டுஅறிக்கையிடவந்தேனென்றாள்
தேசத்தையாளுந்திரியோதிரன்கேட்டு
எண்ணாதுமெண்ணியல்லோஏங்கிமனந்தளர்ந்து
அருகிருக்குந்தோழனுக்குஆளனவன்ஏதுசொல்வான்
காஞ்சிநாடாளும்கருணர்பெருமாளே
குறத்திதனைத்தேடிவந்தானும்குறவனவன்
அந்தக்குறவனையும்அடையும்சிறையில்என்றான்
சீர்பதத்தைமாற்றிச்சிறையிலடையுமென்றான்
கால்விலங்குகைவிலங்குசமுட்டாப்பெருவிலங்கு
விலங்கிட்டுமன்னவனைவிடுகிடங்கில்போடுமென்றான்
அந்தவுரைகேட்டுஅங்குராயர்ஏதுசொல்வார்
வீஷ்மர்முகம்நோக்கிவேந்தர்எடுத்துரைப்பார்
இனியெட்டுத்திங்களிலேயினியபோருண்டாகி
பாரதப்போரதனில்படைமன்னர்சேவகமும்
வாள்விஜையன்சண்டையிலேமன்னவர்கள்சேவகமும்
அர்ச்சுனன்சண்டையிலேஅரசர்கள்விரியமும்
நகுலனிடசண்டையிலேராசாக்கள்சேவகமும்
வீமனிடசண்டையிலேவில்வேந்தர்ஆண்மைகளும்
சகாதேவன்சண்டையிலேசாமர்த்தியமுள்ளவன்காண்
வெளிப்படநாளாச்சுவேந்தர்படைமுகத்தில்
இதற்குள்ளேயிங்கொருபோர்ஏன்தேடிக்கொள்ளுகிறீர்
நாளைக்கும்போருநடக்கவேதாமிருக்க
இப்போதும்போருஎழுப்பவும்நியாயமுண்டோ
குறவனைத்தான்பிடித்துக்கிடங்கிலடைப்பானேன்
மலைக்குறவன்தனைப்பிடித்துவன்சிறையில்வைப்பானேன்
மலையிலேவாசம்பண்ணும்வனக்குறவர்எல்லாரும்
இவனைச்சிறையில்வைத்தால்ஆரார்முடிகள்போமோ

அத்திபுரமனைத்துமடங்கலுமண்ணுமோ
கோசவளநாடுங்குமுறித்தழும்பிடுமோ
பஞ்சவர்கள்கையாலேமாளுதற்குமுன்பாக
குறவரிடகையாலேகொற்றவர்கள்மாளணுமோ
வனக்குறவர்கையாலேமன்னர்கள்மாளணுமோ
குவலயத்தையாண்டமன்னர்குறவனாலேமாளணுமோ
வையகங்களுள்ளளவுமாறுதபேராகி
சூரியருள்ளளவும்தொல்லுலகில்பேராகும்
குறியுரைக்கவந்ததொருகுறத்தியவள்தனையும்
தேடியழைக்கவந்ததெளிந்தகுறவனையும்
அனுப்பிவிடுமனுப்பிவிடும்அரசாளுமன்னர்களே
வறுத்தசெந்நெல்கைகொடுத்துமங்கையனையனுப்பிவிடும்
சுட்டசெந்நெல்கைகொடுத்துத்தோகையனைப்போகவிடும்
போகவிடுமென்றுசொல்லிப்பொற்கருணர்தாமுரைத்தார்
அங்குள்ளமன்னர்அரசர்களுந்தான்கேட்டு
கருணருரைத்ததுகாரியந்தானென்றுசொன்னார்
தேசத்தழகன்துரியோதனன்கேட்டு
அங்கிருக்குந்தூதுவனையரசமன்னன்தான்கேட்டு
அறையிலடைத்துவைத்தஅழகுகுறத்திதனை
கல்லறையிலுள்ளடைத்தமெல்லியனைவெளியேவிடும்
கனத்தசெந்நெல்கைகொடுத்துமாதனைப்போகவிடும்
சுட்டசெந்நெல்கைகொடுத்துத்தோகையனைப்போகவிடும்
போகவிடும்போகவிடும்பொற்கொடியாள்நாயகத்தை
செல்லவிடுஞ்செல்லவிடுந்தேனார்கருங்குழலை
என்றவுரைகேட்டுஎழுந்திருந்தார்தூதுவரும்
அரண்மனையேழுகட்டும்அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதிதெருவும்பலகடந்து
குறத்தியிருப்பிடத்தேவந்தார்கள்கொற்றவர்கள்
சட்டிவைத்துச்செந்நெல்வறுத்துமேகைகொடுத்து
கொள்ளும்பயறுமங்கேகூடவறுத்தார்கள்
எள்ளும்பயறுமங்கேஎடுத்துவறுத்தார்கள்
அத்தனையுங்கைபிடித்துஆணழகர்வெளிவாரார்
சுற்றியவர்கைபிடித்துத்தோகைநல்லாள்முன்னேவந்து
இட்டவிலங்கையிணைவிலங்கைத்தட்டிவிட்டார்
போட்டவிலங்குகளைப்பொட்டெனவேதட்டிவிட்டு
வறுத்தசெந்நெல்கைகொடுத்துமங்கையனைப்போகுமென்றார்
சுட்டசெந்நெல்கைப்பிடித்துத்தோகையனைநடவுமென்றார்

கொடுத்ததொருசெந்நெல்கனைக்கொட்டினார்கூடைதனில்
வாங்கிநடக்கையிலேமயிலனையாளேதுசொன்னாள்

குறம்.

இன்னமொருபத்துதிங்கள்சென்றபிறகல்லோ
இவர்கள்பூமுடியிலேயிறக்கவும்நாளாச்சு
பத்தினியாள்சாபத்தினால்பார்மன்னர்நீங்கள்
பஞ்சவர்கள்கையாலேமாண்டிடுவீரென்றாள்
அருங்கிளியாள்சாபத்தினாலரசரெல்லாம்நீங்கள்
ஐவரிடகையாலேஅனைவர்களுமாள்வீர்
என்றுசொல்லிகுறத்தியவளேகிவழிநடந்து
இளவிசைபன்முன்னேவந்தாள்இவங்குறத்திதானும்
அர்ச்சுனனைக்கண்டவுடன்அருங்கிளியாள்தானும்
அவனுடன்குறவன்முன்னேயருங்கிளியாள்சொல்வாள்
அத்திப்புரவீதியிலேயருங்கிளியாள்வந்தேன்
அவ்வீதியரசரெல்லாம்அழைத்தாரல்லோபெண்டாய்
மண்மீதழிவீரென்றுமன்னருக்குவுரைத்து
மற்றுமொருவீதியிலேகுறம்பாடிவந்தேன்
குறம்பாடிவீதிவரக்கொம்பனைமார்கேட்டு
சொக்கைக்குறத்தியென்றனையழைத்தார்மனைக்கு
மகாராசன்தேவியாம்மயிலனையாள்தனக்கு
மங்கையவள்கேட்டுமல்லோமயிர்விரித்துஅழுதாள்
அத்தையவள்காந்தாரியருகாகவந்தாள்
அவள்தனக்குங்குறியுரைத்தேனுடைமகாகேளும்
மாபாவிகேட்டுமந்தமைந்தனுக்குவுரைக்க
மண்ணாளுந்துரியோதனன்வந்துகுறிகேட்டான்
அரசுமுடிமன்னனுக்குஆனகுறிசொன்னேன்
அவன்கேட்டுமன்னவனுமடைத்தானேசிறையில்
கால்விலங்குகைவிலங்குகனக்கவேதான்பூட்டி
காவலிலேவையுமென்றான்கள்ளனைப்போலென்னை
மன்னன்வைத்தகாவலிலேமயிலனையாளிருந்து
மாயவனைக்கைதொழுதுமாதுவெளியானேன்

வேறு.

குறத்தியுரைத்ததெல்லாம்குறனவன்கேட்டு
அரசாளுமன்னனுக்குஆண்மைகளுண்டானால்
அவனைத்தாரசருடன்எதிர்த்துப்போர்செய்யவேண்டும்

ஐவரையும்போலாகவைத்தானேகாவலிலே
ஆரொன்றெண்ணியிருந்தானேஅணழகன்
கள்ளிதிருடியைப்போல்கட்டவந்தகாரணமேன்
விலங்கிட்டமன்னவனைவெட்டித்தலைதுணிப்பேன்
காவலிலேவைத்தவனைக்கண்டதுண்டஞ்செய்திடுவேன்
ஐவரிடகைபாலேயடிபோடேமாளுதற்கு
காலங்களாச்சுதென்றுகட்டழகன்போகலுற்றான்
குறவனுங்குறத்தியரும்கூடிவழிநடந்தார்
கட்டுவச்சிநாயகியும்கணவனுடனாக
அத்திப்புரந்தாண்டியங்கவளநாடுவிட்டு
காடுசெடிதாண்டிகரியமலைதாண்டி
ஆறுசுனைதாண்டியடர்ந்தவனந்தாண்டி
விராடகர்க்கருகேவந்தாரிருவருமாய்
குறத்தியுருவழித்துக்கொம்பனையாள்போலேவாராள்
கட்டுவச்சிவேஷமாறிக்கன்னியருமங்கேவந்து
விராடத்தாசன்மனையுந்துவாழ்ந்திருந்தாள்
பணிப்பெண்ணைப்போலாகப்பாஞ்சாலியங்கிருந்தாள்
காண்டாவனமெரித்தகாளையருச்சுனனும்
குறவனுருமாறிக்கொற்றவனும்வடிவெடுத்து
பேடியைப்போலேபுகுந்தானரண்மனையில்
தர்மனைக்கண்டுமவன்சாஷ்டாங்கதெண்டனிட்டு
பாஞ்சாலன்பெற்றதொருபத்தினியாள்துரோபதையும்
குறத்திவடிவெடுத்துக்கொம்பனையாள்சென்றதுவும்
அத்திப்புரத்தார்க்குஆனகுறஞ்சொன்னதுவும்
கபடன்துரியோதனன்காவலிலேவைத்ததுவும்
ஆயாதுவறிந்துஅவர்வந்துவுரைத்ததுவும்
அத்திப்புரம்போய்அழைத்துவந்துசேர்ந்ததுவும்
அத்தனையுந்தானுரைத்துஅர்ச்சுனன்போய்நடந்தான்
ஐவரும்துரோபதையும்அங்கேயிருந்தார்கள்
மன்னவரும்தேவியரும்மகாராசன்பட்டணத்தில்
சுகமாகவாழ்ந்திருந்தார்சுந்தரப்பூமுடியார்
இந்தக்கதைதன்னையெழுதிப்படித்தவர்கள்
பாஞ்சாலிதன்குறத்தைப்பத்தியுடன்கேட்டவர்கள்
துரோபதைதன்குறத்தைத்துரிதமாய்ப்படிப்பவர்கள்

மாயன்பெருமாளின்மகதேவர்கிருபையினால்
நற்பதவிதானடைவார் நாட்டிலுள்ளமானிடர்கள்
இந்தக்கதைதன்னையின்பமாயச்சிவிட
வேங்கடராமபூபன்வேல்வேந்தனீன்றெடுத்த
நாராயணசாமிநற்பாலன்சொற்படிக்கு
திக்கெட்டுங்கீர்த்திபெற்றதமிழ்வல்லோன்வேதகிரி
மைந்தனுங்கந்தசாமிமகிழ்பாலனிக்கதையை
குற்றங்களில்லாமல்குறையொன்றும்வாராமல்
பெண்களுக்குபயோகமாய்ப்பரப்பிரமசாலையிலே
கீர்த்திவிளங்கக்கிருபையுடனச்சிவிட்டான்
ஆல்போலேதழைத்துஅறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம்முசியாமல்வாழ்ந்திருப்பார்
வாழிவாழியென்றுசொல்விவரமளித்தாரீஸ்வரனார்

புகழேந்திப்புலவரவர்கள்பாடிய

துரோபதை குறம்

முற்றிற்று.